123

# மாணவர் செந்தமிழ் வாசகம்

முதற் படிவம்

பொதுப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1954
MADRAS

123
2-54

வெளியிடுவோர்
ர்மேகக்கோன்
மதுரை

TB
031(6)
N53
88446.

# மாணவர் செந்தமிழ் வாசகம்
## முதற் படிவம்
## பொதுப் பகுதி

## (Form I — Part I)

*ஆசிரியர் :*
ரா. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ., எல்.டி., பி.ஓ.எல்.,
தலைமைத் தமிழாசிரியர், மதுரைக் கல்லூரி,
மதுரை.

*பதிப்பாசிரியர் :*
ஆ. கார்மேகக் கோன்
முன்னாள், தமிழ்ப் பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை

*வெளியிடுவோர் :*
ஆ. கார்மேகக் கோன்
தல்லாகுளம் :: மதுரை.

பதிப்புரிமை] 1953 [விலை அணு 12

தே நோபிலி அச்சகம், கோ. புதூர், மதுரை

# முகவுரை

**மாணவர் செந்தமிழ் வாசகம்** (பொதுப் பகுதி) என்னும் இவ்வாசக வரிசை 26—6—1951-ல் அரசாங்கக் கல்வி இலாகா வெளியிட்ட புதுப் பாடத் திட்டத்தின்படியே எழுதப்பெற்றுள்ளது. அத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா முறைகளையும் நன்கு கவனித்துப் பாடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. மாணவர்கள் பல துறைகளிலும் அறிவு பெறுதற் பொருட்டு இலக்கியம், பெரியோர் வாழ்க்கை, சரிதம், கலை, ஊர்ச்செலவு, கடிதம், நாடகம், உரையாடல், கைத்தொழில், சிறுகதை முதலிய பொருள்கள் பற்றிய பாடங்கள் இவ்வாசகத்தில் அமைந்துள்ளன.

பாடங்களின் முடிவில் வினாக்களும், பயிற்சிகளும், அருஞ் சொற் பொருட் குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மொழி அறிவும், நல்ல உரைநடைப் பழக்கமும், உண்டாவதற்கு ஏற்றவாறு இனிய, எளிய, சொற்களும் தொடர்களும் அமைந்த நடை, இப்புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தை நன்கு பார்வையிட்டு வெளியிட முன் வந்த தமிழ்ப் பேராசிரியர் திரு **ஆ. கார்மேகக்கோனார்** அவர்கட்கு என் நன்றி உரியதாகும்.

சிறுவர்க்குரிய இவ்வாசகத்தைத் தத்தம் பள்ளிகளில் பாடப் புத்தகமாக அமைத்து, பயன்படுத்துமாறு ஆசிரியப் பெரியோர்களை அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

**R. கிருஷ்ணமூர்த்தி**

# முதற்படிவம் - பொதுப்பகுதி

## பொருள் அடக்கம்

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சர்தார் வல்லபாய் படேல் | 1 |
| 2. | குழந்தை மனம் | 7 |
| 3. | வீரமங்கை லக்ஷ்மிபாய் | 12 |
| 4. | தீப்பெட்டித் தொழில் | 16 |
| 5. | தந்தையின் கடிதம் | 22 |
| 6. | தோதவர்கள் | 28 |
| 7. | நிலக்கரியின் சுய சரிதை | 34 |
| 8. | உலகத்தைச் சுற்றி முதற் கடற் பயணம் | 39 |
| 9. | தவறிய குழந்தை | 46 |
| 10. | ராஜா. சர். அண்ணாமலை செட்டியார் | 51 |
| 11. | அபாயத்திற்கேற்ற உபாயம் | 56 |
| 12. | அரசு துறந்த அண்ணல் (நாடகம்) | 61 |
| 13. | வானொலிப் பேச்சு | 66 |
| 14. | நாகனும் வளவனும் (உரையாடல்) | 73 |

# செய்யுட் பகுதி

## I வாழ்த்து

1. தாயுமானவர் பாடல்
2. நாலாயிரப் பிரபந்தம்
3. திருவாசகம்
4. இரட்சணிய யாத்திரிகம்

---

## II அறவுரை

1. நன்னெறி
2. நீதிநெறி விளக்கம்
3. திரிகடுகம்

---

## III கதை

1. கயவன் கல்வி அருமை அறிந்தது
2. முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

---

## IV பல்துறை

1. அரியது எது?
2. தமிழன் இதயம்
3. பாண்டியநாட்டு வளம்

---

## V தனிப் பாடல்கள்

1. தமிழ் நாடு
2. உழவே இனிது
3. சத்திரத்தில் சோறிடும் அழகு
4. ஆடையே ஒருவர்க்குச் சிறப்பு.

---

# மாணவர் செந்தமிழ் வாசகம்

## முதற் படிவம்

## பொதுப் பகுதி

## 1. சர்தார் வல்லபாய் படேல்

1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் நாள் நம் இந்தியா அடிமை வாழ்க்கை யினின்றும் விடுதலை பெற்றது. அவ்விடுதலையைப் பெறுவதற்கு நம் நாட்டுப் பெருந்தலைவர்கள் பலர் பல்லாண்டுகள் இடையறாது போராடிப் பல துன்பங்களை அடைந்துள்ளனர். இவ்வாறு இந்தியாவின் விடுதலைப் போரில் முன்னணியில் நின்றவர்கள் மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு, **சர்தார் வல்லபாய் படேல்** முதலான பல பெரியோரர்வர். இவர்களுள் படேல் அவர்களின் வாழ்க்கை, மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு ஆகியவர்களின் வாழ்க்கை போன்றே யாவருக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகவும் படிப்பினையாகவும் விளங்குகிறது.

படேல் 1875-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் நாள் குஜராத்தில் **கரம்சாத்** என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையார் ஜாவேரிபாய் என்பவர். அவர் ஒரு செல்வ மிக்க விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். படேல் இளமையில் அதிக அறிவு நுட்பமும் சுறு சுறுப்பும் உள்ளவராக இருந்தார். அவருடைய தந்தையார் 1857-ம் ஆண்டில் வட இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகம் எனப் படும் முதல் இந்திய சுதந்திரப் போரில் பங்கெடுத்துக்

கொண்டார். அதில் அவர் தாம் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட செய்திகளையும் தமது மற்ற அனுபவங்களையும் தமது புதல்வர்களுக்குக் கூறுவது வழக்கம். அவற்றைப் படேல் அதிக ஆவலோடு கேட்பார். அதனால் இளம் பருவமுதலே அவருடைய உள்ளத்தில் நாட்டு விடுதலைக்காக உழைக்க வேண்டுமென்னும் அவா உண்டாயிற்று.

படேல் சிறு வயதில் நாடியாட் என்னும் நகரில் உள்ள பள்ளியில் கல்வி பயின்றார். அங்குப் படிக்கும் போது ஆண்டு தோறும் பள்ளித் தேர்வுகளில் தவறாது நன்கு தேறினார். பின்னர் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டுச் சட்டக் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்று வழக்கறிஞர் ஆனார். பிறகு அவர் தம் ஊருக்கே திரும்பி வந்து வழக்கறிஞர் தொழிலைத் திறம்பட நடத்தி வந்தார்.

அவர் தம் தொழிலைச் செய்யும் போது உண்மைக்கு மாறான வழக்குகளை ஏற்று நடத்த மாட்டார்; நியாயமுள்ள வழக்குகளையே எடுத்து நடத்துவார்; இதனால் வக்கீல் தொழிலில் அவர் விரைவில் முன்னேறிப் புகழ் பெற்றார்.

ஆயினும் அவர் மேலும் பெரிய வக்கீலாக வேண்டுமென்று விரும்பினார்; அதனால் இங்கிலாந்திற்குச் சென்று லண்டனில் "பாரிஸ்டர்" பட்டப் படிப்புப் பயின்றார்; அதிலும் முதன்மையாகத் தேறி ஐம்பது பவுன் பரிசு பெற்றார். பிறகு 1913-ம் ஆண்டு இந்தியாவிற்குத் திரும்பி வந்து **ஆமதாபாத்தில்** தம் தொழிலைத் தொடங்கினார். அவர் ஆங்கில நீதிபதிகளுக்கும் அரசாங்க அலுவலாளர்க்கும் உண்மையை உரைப்பதில் அஞ்சாது வாதாடுவார். அதைக் கண்டு யாவரும் அவரைப் போற்றினர்.

அவர் ஆமதாபாத்தில் இருக்கும் பொழுது மகாத்மா காந்தியவர்களும் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்து அங்கு வழக்கறிஞராக அமர்ந்தார். படேல் அவருடன் பழகி அவரால் மிகவும் விரும்பப்பட்டார். பிறகு அவருடன் சேர்ந்து பொதுநலப் பணியில் ஈடுபடலானர். அப்பொழுது குஜராத்தில் கெய்ரா ஜில்லாவில் அந்நிய அரசாங்கத்தின் கொடுமையை எதிர்த்துப் படேல் முதல் முதலாகப் போராடினர். அவரது போராட்டத் திறமையைக் கண்ட காந்தியடிகள் அன்று முதல் அவரைத் தன் இன்றியமையாத் துணைவராகக் கொண்டார்; பின்னர் அவருக்கு அடிகள் இந்திய விடுதலைப் போரில் பல முக்கியமான பொறுப்புகளைக் கொடுத்தார்.



சர்தார் வல்லபாய் படேல்

கெய்ரா போராட்டத்தை அடுத்து, ஆமதாபாத்தில் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்த மொன்று நிகழ்ந்தது. அதில் படேல் தலைமை தாங்கித் தொழிலாளருக்கு வெற்றி கிட்டுமாறு செய்தார். அது முதற்கொண்டு ஆமதாபாத்தில் அவரது புகழ் எங்கும் பரவிற்று. பிறகு அவர் ஆமதாபாத் நகரசபை உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியிலும் அவர் பல சிறந்த பொதுநலத் தொண்டுகளைச் செய்தார். ஒரு

முறை ஆமதாபாத்தில் பிளேக் நோய் கண்டதால் அனைவரும் ஊரை விட்டுச் சென்று விட்டனர். ஆனால் படேல் மட்டும் அஞ்சாது அங்கேயே இருந்து நோயுற்றோர்க்கு வேண்டிய உதவிகள் செய்து வந்தார். இது அவரது மனவுறுதிக்கும் பொதுநலத் தொண்டில் அவருக்கு உள்ள ஆர்வத்திற்கும் ஓர் அரிய எடுத்துக் காட்டாகும்.

தேசத் தொண்டில் அவருக்கு ஆர்வம் மிகவே அவர் தம் வக்கீல் தொழிலையும் உதறித் தள்ளிவிட்டார். காந்தியடிகள் தொடங்கிய இந்திய விடுதலைப் போரில் அவர் துணிந்து இறங்கலானார்; அதனால் ஆங்கில அரசாங்கத்தாரால் சிறையிலிடப்பட்டார். அவர் சிறையிலிருந்து மீண்டதும் குஜராத்தில் பார்தோலி தாலுகாவில் அந்நிய ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்து அறப்போர் நடத்தினார்; அதிலும் மாபெரும் வெற்றி கண்டார். இவ் வெற்றியைப் பெற்றுத் தந்த படேலுக்குப் பொது மக்கள் "சர்தார்" (சேனைத் தலைவர்) என்னும் பட்டத்தை வழங்கி அவரைப் பாராட்டினர். அன்று முதல் அவர் இந்தியா முழுவதற்கும் சர்தாராகவே விளங்கினார்.

அவர் 1928-ல் தமிழ் நாட்டில் வேதாரணியத்தில் நடந்த காங்கிரஸ் அரசியல் மாநாட்டிற்கு வந்தார். அதில் அவர் தமிழ் மக்கள் சுதந்திர உணர்ச்சி கொள்ளுமாறு ஒரு அரிய சொற்பொழிவாற்றினார். 1931-ல் கராச்சியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிற்கு அவர் தலைவராய் விளங்கினார். பின்னரும் பன்முறை அவர் காந்தியடிகளைப் பின்பற்றிச் சிறை சென்றார்.

இறுதியாக 1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்த போது ஜவாஹர்லால் நேரு தலைமையில் ஒரு அமைச்சர் அவை நிறுவப்பட்டது. அதில் சர்தார் படேல் உதவி

முதல் அமைச்சராக விளங்கினர். இப்பொறுப்பில் அவர் மிகத் திறமையும் துணிவும் காட்டி ஆட்சி நடத்தினர். அப்போது அவர் செய்த ஒரு மாபெரும் செயல் குறிப்பிடத்தக்கது. அது யாதெனில், இந்தியாவில் சிறியதும் பெரியதுமாகச் சிதறிக் கிடந்த அறுநூறுக்கு மேற்பட்ட சுதேச சமஸ்தானங்களைச் (தனியரசுகளை) சுதந்திர இந்திய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்ததேயாகும். அவர் நம் நாட்டிற்கு மற்றொரு மறக்க முடியாத சமயத் தொண்டினையும் செய்திருக்கிறார். குஜராத்தில் பல நூற்றாண்டுகளாக வழிபாடற்றுச் சிதைந்து கிடந்த சரித்திரப் புகழ்பெற்ற சோமநாதபுர ஆலயத்தை அதிகச் செலவில் அவர் புதுப்பித்தார். அதில் இறைவன் திருவுருவத்தையும் தாபித்துப் பெரியதோர் விழாக் கொண்டாடினர். இதன் மூலம் அவர் நம் நாட்டின் பழம் பெருமையை மீண்டும் நிலை நாட்டினர். இச் செயல் அவருடைய கடவுட் பற்றுக்கு ஓர் சிறந்த சான்றாக விளங்குகின்றதன்றோ!

படேல் பல அருங்குணங்கள் நிறையப் பெற்றவர்; அவர் ஒரு தலைசிறந்த அறப்போர் வீரர்; அண்ணல் காந்தியடிகளின் ஆணைகடவாதவர்; அஞ்சா நெஞ்சினர்; எந்நிலையிலும் கலங்காத உறுதியுடையவர். மன உறுதிபோலவே உடலுறுதியும் அவருக்கிருந்தது. இதனால் அவரை "**இரும்பு மனிதர்**" என்று சொல்வதுண்டு. அவாது உறுதியைக் கண்டு ஆங்கில அரசாங்கமும் பன்முறை நடுக்கங்கொண்டது. ஆனால் அவர் மேற்பார்வைக்கு மட்டுமே இரும்பு மனிதராக இருந்தார். உண்மையில் அவர் எளியவருக்குக் கரும்பு போல் இனியவர்; வெண்ணெய்போல் இளகும் மனமுடையவர்; மக்கள் துயர் கண்டு எளிதில் இரங்கும் இயல்புடையவர்; அவர் சிறந்த செயல்வீரர். நீதி, நேர்மை, ஒழுக்கம், விடாப்பிடி, கண்

டிப்பு, முதலியவை அவரது சிறந்த பண்புகள். அவர் சரியான காலத்தில் தயக்க மின்றிச் சரியான முடிவைச் செய்வார். அதனால் அவரது செயல்களில் அவருக்கு வெற்றியே கிட்டியது. ஒவ்வொரு வேலைக்கும் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதும், பிறகு அவர்களை முற்றிலும் நம்பி அவர்களிடம் அக்காரியங்களை ஒப்படைப்பதும், அவரிடமிருந்த சில தனிப் பண்புகள். மகாத்மா காந்திக்கு அடுத்தாற்போல் எக்கட்சியினரும் அவரிடமே அதிக மதிப்பு வைத்திருந்தனர்.

இத்தகைய சிறந்த பெரியார் 1950-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் நாள் நம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சார்ந்தார். நாட்டின் தொண்டிலேயே கடைசி நிமிடம் வரை நாட்டம் வைத்து அதனாலேயே உடல்நலம் குன்றி நோய்வாய்ப் பட்டு அவர் இறந்தார். கண் மூடும் வரையில் அவர் தம் கடமையைச் செய்து வந்தார். இப்பெரியாரின் புகழ் உலகம் உள்ள அளவும் அழியாது நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

---

I வினாக்கள் :

1. இளமையில் படேல் மனதில் இந்தியாவின் விடுதலைக்காகப் போரிட வேண்டுமென்னும் எண்ணம் எப்படி உண்டாயிற்று?
2. வழக்கறிஞர் தொழிலில் அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகள் என்ன ?
3. 'சர்தார்' பட்டம் அவருக்கு எதனால் வந்தது ?
4. அவரது அருங்குணங்களைக் கூறுக.

II வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :

எடுத்துக் காட்டு, அறிவு நுட்பம், உதறித் தள்ளுதல்,

III அருஞ்சொற் பொருள் :

எடுத்துக் காட்டு — உதாரணம் ; வழக்கறிஞர் — வக்கீல் ; அலுவலாளர் — உத்தியோகஸ்தர் ; வழிபாடு — பூசை ; கடவுட் பற்று — தெய்வ பக்தி.

---

# 2. குழந்தை மனம்

(இரஷியச் சிறுகதை—டால்ஸ்டாய்)

இரஷிய நாட்டில் **ஐஸ்டோன்** என ஒரு சிற்றூர் உண்டு. அந் நாட்டில் பனிக் காலத்தில் பனி, தெருவெல்லாம் படிந்து கிடக்கும். சூரியன் தோன்றியவுடன் அது உருகித் தெருக்களில் ஓடையாகிப் பெருகும். அப்படி தெருவில் நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த ஒரு நாள், எதிர் வீடுகளிலிருந்து இரண்டு சிறுமிகள் ஓடையருகில் சந்தித்தனர். அன்று பண்டிகை நாளாகையால் இருவரும் அழகிய பட்டுத் துணிகளை யணிந்து மகிழ்ச்சியாகக் காணப்பட்டனர். அவர்களுள் ஒரு பெண் பெரியவள், மற்ற பெண் சிறியவள். முன்னவள் பெயர் **அகல்யா** பின்னவள் பெயர் **மலாஷா**. இருவரும் தத்தம் ஆடையின் சிறப்பைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

பிறகு மலாஷா அழுக்கு நீர் பெருகியிருந்த ஒரு குட்டையில் இறங்கப் போனாள். அகல்யா அவளைத் தடுத்து, "வேண்டாம், உன் தாயார் வைவாள்", என்றாள். மலாஷா சிரித்துக்கொண்டே அக் குட்டையில் இறங்கி, ஆடை நனையாமல் நீரைக் கலக்கி விளையாடத் தொடங்கினாள். அதைக் கண்ட அகல்யாவும் அக்குட்டையில் இறங்கி விளையாடப் போனாள். அவள் தன் ஆடையை தூக்கிப் பிடித்துக்கொண்டு, "மலாஷா, மெதுவாக விளையாடு; என் ஆடைமேல் தண்ணீர் விழக் கூடாது, தெரியுமா?" என்றாள். உடனே மலாஷா வேண்டுமென்றே தன் காலை ஓங்கித் தண்ணீரில் மிதிக்க, அகல்யாவின் ஆடை முழுதும்

அழுக்கு நீர் படிந்து மாசடைந்து விட்டது. ஆகையால் அகல்யா மலாஷாவை அடிக்க முயன்ருள். மலாஷா அவ ளிடமிருந்து தப்பி ஓடி வீட்டிற்குள் போய் விட்டாள்.

அப்பொழுது தற்செயலாக அகல்யாவின் தாய் அவள் சட்டையை நனைத்துக்கொண்டு வருவதைப் பார்த்து அவளை வைதாள். உடனே அவள், "இல்லையம்மா, எதிர் வீட்டுப் பெண்தான் இப்படிச் செய்து விட்டாள்", என்று அழுதாள். அவ்வளவில் அகல்யாவின் தாய், வீட்டிற்குள் கதவருகில் மறைந்து பார்த்துக்கொண்டிருந்த மலா ஷாவை வெளியே இழுத்துக்கொண்டு வந்து நையப்



புடைத்தாள். அடி பொறுக்காமல் அவள் அலறி அழுத தைக் கேட்ட அடுத்த வீட்டார், தெருவிலுள்ளவர், அனை வரும் கூடி விட்டனர். அவளுடைய தாயும் உள்ளிருந்து

வெளியே வந்து என்னவென்று விசாரித்தாள். "என் குழந்தையை ஏன் அடித்தாய்?" என்று அவள் அகல்யா வின் தாயைக் கேட்டாள். அதற்கு அவள் சீறிவிழுந்து அவளுடன் சண்டை யிடத் தொடங்கிவிட்டாள். இதைக் கண்டு தெருவில் உள்ள ஆண்பெண் யாவரும் அவர்களைச் சுற்றிக்கொண்டு சமாதானம் செய்ய முயன்றனர். இரு வரும் அவர்கள் சொல்வதைக் கேட்காமல் சண்டை யிட் டுக்கொண்டே யிருந்தனர். வரவர வாய்ச் சண்டை கைச் சண்டையாக முற்றி விட்டது. ஒருத்தி சொன்னது மற் றொருத்தி காதில் விழவில்லை. அச்சமயம் அகல்யாவின் பாட்டி அங்கு வந்து அவர்களை விலக்க முயன்றாள். "இப் படிச் சண்டை யிடலாமா? அதுவும் பண்டிகைநாளன்று? நன்றாக இருக்கிறது உங்கள் நடத்தை. நிறுத்துங்கள் சண்டையை. நல்லநாளும் அதுவுமாகச் சந்தோஷமாக இருங்கள்", என்று அவள் கூறினாள்.

கிழவி சொன்னதும் அவர்கள் காதில் ஏறவில்லை. அவளை அப்பால் தள்ளிவிட்டு மீண்டும் அவர்கள் சண்டை யிட்டுக் கொண்டனர். இதற்குள் அகல்யா தன் சட்டை யில் இருந்த சேற்றைத் துடைத்து விட்டு மறுபடியும் குட் டையில் விளையாடப் போய் விட்டாள். அதைக் கண்ட மலாஷாவும் அங்குச் சென்று அவளுடன் விளையாடலா னாள். இருவரும் மகிழ்ச்சியோடு விளையாடிக் கொண்டே, குட்டை நீரை வெளியேற்ற ஒரு வாய்க்கால் தோண்டினர். அதனைத் தோண்ட அவர்கள் கையில் ஒரு மரக்கட்டையை வைத்திருந்தனர். குட்டை நீர் அவ் வாய்க்காலில் வேக மாக ஓடி, அக் கட்டையை இழுத்துக் கொண்டு போய் விட்டது. அதைப் பிடிக்க இருவரும் அதன் பின்னால் தொடர்ந்து ஓடினர்.

இதற்கிடையில் பெண்கள் சண்டை ஆண்கள் சண்டை யாக வளர்ந்து விட்டது. தெருவிலுள்ள ஆண்கள் எல்

லாம் இரு கட்சிகளாகக் கூடிக் கைகலந்துகொண்டிருந்த இடத்தில், குட்டைத் தண்ணீர் பெருக்கெடுத்து வந்துவிட்டது. அதில் அக் கட்டையும் மிதந்து அவர்களருகில் வந்தது. அதனைப் பிடிக்க இரு பெண்களும், அவர்களுக்கிடையில் நுழைந்து துழாவினர். ஆனால் அவர்களோ அதைப் பார்க்காமல் சண்டை யிட்டுக்கொண்டே யிருந்தனர். அகல்யாவின் பாட்டி இதை யெல்லாம் கண்டாள். உடனே அவள் சண்டை யிடுபவர்களைப் பார்த்து, "உங்களுக்கு வெட்கமாக இல்லையா? அதோ பாருங்கள். அக் குழந்தைகளே தம் சண்டையை மறந்துவிட்டு விளையாடத் தொடங்கிவிட்டார்களே. அவர்களுக்காக நீங்கள் ஏன் சண்டை யிடவேண்டும்? சிறு குழந்தைகளாயினும் உங்களை விட அவர்கள் அதிக அறிவுள்ளவர்கள்", என்று அவர்கள் வெட்கமடையும்படி பேசினாள்.

சண்டை யிட்டுக்கொண்டிருந்த ஆடவர் திரும்பிப் பார்த்து, இரு குழந்தைகளும் விளையாடுவதைக் கண்டு வெட்கித் தலை குனிந்தனர். கூட்டம் கலைந்தது. அவரவர்கள் தத்தம் வேலையைக் கவனிக்கச் சென்றனர். "**பெரியவர்களும் சிறு குழந்தைகளைப்போல மனம் மாறினாலன்றி அவர்கள் ஆண்டவன் முன்னிலையில் செல்ல முடியாது**" என்ற விவிலிய நூல் வாக்கியத்தை அவர்கள் நினைவிற்கு அக் கிழவி கொண்டுவந்தாள்.

---

I வினாக்கள் :

1. மலாஷாவை அகல்யா ஏன் அடிக்கச் சென்றாள்?
2. சிறுவர் சண்டை எப்படித் தெருச் சண்டையாக மாறியது?
3. கிழவி வந்து என்ன கூறினாள்?
4. குழந்தைகள் மீண்டும் எப்படி ஒன்று கூடினர்?
5. ஆடவர் சண்டை எப்படி நின்றது?

II

1. சண்டை யிட்டுக்கொண்டிருந்த ஆடவர் திரும்பிப் பார்த்து, இரு குழந்தைகளும் விளையாடுவதைக் கண்டு வெட்கித் தலை குனிந்தனர் — இவ் வாக்கியத்தைச் சிறு சிறு வாக்கியங்களாகப் பிரித்தெழுது.

2. பெரியவர்களும் சிறு குழந்தைகளைப் போல மனம் மாறினாலன்றி அவர்கள் ஆண்டவன் முன்னிலையில் செல்ல முடியாது — இதில் 'மாறினாலன்றி' என்பதை 'மாறினால்தான்' என்று வைத்து வாக்கியத்தை மாற்றி யெழுது.

III சொற்பொருள் :

சிற்றூர் — கிராமம் (சிறு + ஊர்) ; மாசு — அழுக்கு ; நையப் புடைத்தாள் — உடம்பு நைந்துபோக அடித்தாள் ; கைகலத்தல் — சண்டை யிடுதல் ; ஆடவர் — ஆண்கள் ; விவிலிய நூல் — பைபிள் என்னும் கிறித்தவ வேதம் ; துழாவுதல் — கலக்குதல்.

# 3. வீர மங்கை லக்ஷ்மிபாய்

இற்றைக்கு ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆங்கில ஆட்சியை எதிர்த்து நம் நாட்டில் உரிமைப் போர் தொடங்கிற்று. அதனைத் தலைமை தாங்கி நடத்தி ஆங்கிலேயரும் அஞ்சும்படியாகத் திறமையுடன் போர் செய்த வீரப் பெண்மணி, **லக்ஷ்மிபாய்** என்பவர். அவர் ஜான்ஸி என்னும் நகரத்திலிருந்து ஆண்டுவந்தார். ஆகவே அவரை "**ஜான்ஸி ராணி**" என்று அழைப்பது வழக்கம். ஜான்ஸி என்பது மத்திய இந்தியாவில் உள்ளது.

ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய் மகாராட்டிர வகுப்பைச் சேர்ந்தவர். மகாராட்டிரர்கள் வட இந்தியாவிலும், தக்காணத்திலும் மொகலாய ஆட்சியை இடை விடாது தாக்கி எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்து கொண்டிருந்தவர்கள்; மொகலாய மன்னர்களது வலிமையைப் பன்முறை முறியடித்து, வீரத்தில் பெயர் பெற்றவர்கள். அத்தகைய வீர மரபில் பிறந்தவர் லக்ஷ்மிபாய். ஜான்ஸி அரசராகிய அவருடைய கணவர் இறந்து விட்டதால், அரசியே ஆட்சியை மேற்கொண்டு நடத்தி வந்தார். அவ்வரசிக்குக் குழந்தை இல்லாததால் அவர் தனக்குப் பின் அரசு பெறுதற்குரிய வேரோர் ஆண் மகவைச் சுவிகாரம் எடுத்து வளர்த்து வந்தார். ஆனால் ஆங்கில ஆட்சியாளர் அம்மகவிற்கு அரசுரிமை தர மறுத்தனர். லக்ஷ்மிபாய்க்குப் பின்னர் அவ்வரசு ஆங்கிலேயருக்கே உரிமையாகிவிடும் என்று அவர்கள் அறிவித்து விட்டனர். லக்ஷ்மிபாய் இதற்கு உடன் படாமல், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்க்கத் தக்க தருணம் பார்த்திருந்தார்.

•

**1857**-ல் வட இந்தியாவில் "**சிப்பாய்க் கலகம்**" என்று கூறப்படும் பெரும் புரட்சி யொன்று உண்டாயிற்று. அதை ஆங்கிலேயருக்கெதிராக இந்தியர் நடத்திய புரட்சி என்றே கூறலாம். அது ஆயுதம் தாங்கிய புரட்சி. அதுவே ஆங்கிலேயரை எதிர்த்துத் தொடங்கிய முதல் இந்திய உரிமைப் போராகும். அப்புரட்சி தோன்றுவ தற்குக் காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானது இராணுவத்தில் இந்தியரை ஆங்கிலேயர் நடத்திய முறை யினுல் ஏற்பட்ட மனவருத்தமே.

இச் சிப்பாய்க் கலகம் காட்டுத் தீப்போல் எங்கும் பாவியது. முதலில் பாரக்பூரில் சிப்பாய்கள் தம் ஆங்கில அதிகாரிகளை எதிர்த்து ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்த னர். அதைக் கேள்வியுற்ற மற்ற இராணுவ நிலையங்களி லும் உடனே புரட்சி தொடங்கியது. அப்பொழுது ஜான் ஸியில் தோன்றிய இப் புரட்சிக்கு ஜான்ஸி ராணியே தலைமை தாங்கினுர்.

இவ்வாறு ஒரு சிறு சமஸ்தானத்து அரசியே இக்கலகத் திற்குத் தலைமை தாங்கி நடத்துகிருள் என்பதனை ஆங்கி லேய அதிகாரிகள் கேள்வியுற்று அதிகக் கோபங்கொண் டார்கள். உடனே அவர்கள் ஜான்ஸி கோட்டையைக் கைப்பற்ற ஒரு பெரும் படையை யனுப்பினுர்கள். அப் படை விரைந்து வந்து கோட்டையை முற்றுகை யிட்டது. முற்றுகை மிகக் கடுமையாகவே இருந்தது. ஜான்ஸி ராணி ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து மிக வீர மாகப் போரிட்டாள். அவருக்குத் **தந்தியா தோபி** என் னும் சிறந்த வீரன் பலவகையிலும் உதவி செய்து வந் தான். எனினும் இறுதியில் கோட்டை தகர்க்கப்பட்டு விட்டது. தந்தியாதோபியை ஆங்கிலேயர் தோற்கடித்து விட்டனர். ஜான்ஸி அவர்கள் வசமாயிற்று. பிறகு

லக்ஷிமிபாயும் தந்தியாதோபியும் தப்பி யோடிக் குவாலி யர் கோட்டையைக் கைப்பற்றினர். அங்கிருந்து ஆங்கி லேயருக்கு உதவி செய்து வந்த சிந்தியாவை அவர்கள் துரத்திவிட்டனர். பிறகு நாஞசாகிபு என்னும் மகா ராட்டிர வீரரைப் பீஷ்வா (தலைவர்) ஆக்கினர்.

ஆங்கிலப் படைக்குத் தலைமை தாங்கி ஜான்ஸியைக் கைப்பற்றியவர் ஸர் ஹ்யூ ரோஸ் என்பவர். அவர் ஜான்ஸி ராணியின் வீரத்தைப் புகழ்ந்து, புரட்சி வீரர்களில் அவ ருக்கு இணை வேறொருவருமில்லை என்று பாராட்டினர். இப்பொழுது அத்தகைய வீரமங்கை குவாலியரைக் கைப் பற்றியதால் அவருக்குக் கவலை யுண்டாயிற்று. ஆகவே அவர் அதை மீட்க அங்கு ஒரு பெரும் படையுடன் விரைந்து சென்றார். இரண்டு படைகளுக்கும் பெரும் போர் மூண்டது. இரு படைகளிலும் பல சிறந்த வீரர் கள் இறந்து விட்டார்கள். இறுதியில் ரோஸ் எதிரிகளை முறியடித்தார். போரில் லக்ஷிமிபாய் குதிரை மீதிருந்த வண்ணம் மிக வீரமாக எதிரிகளைத் தாக்கி வாளுக்கு இரையாக்கிக் கொண்டிருக்கும்போது, அவ் வீரமங்கை பகைவரது ஈட்டியால் குத்துண்டு கீழே விழுந்து இறந் தார். தன் நாட்டிற்காகத் தன் உடம்பில் இருந்த கடைசி துளி இரத்தத்தையும் அவர் சிந்தி வீரசுவர்க்க மடைந் தார். போர்க்களத்தில் பகைவரும் அவரது வீரத்தைப் பாராட்டினார்கள். அவர் இறந்தவுடன் புரட்சிக்காரர் களுக்கு வலக்கை முறிந்ததுபோல் ஆகிவிட்டது. நாஞ சாகிபும் தந்தியாதோபியும் தோற்றோடினார்கள். பகைவர் தோபியை மட்டும் பிடித்துத் தூக்கிலிட்டு விட்டார்கள். நாஞசாகிபு சென்ற இடம் தெரியவில்லை.

வீரமங்கை ஜான்ஸி ராணி வீரத் தாய்மார்களின் வரிசையில் முதலிடம் பெறத்தக்கவர். அகல்யாபாய்,

சாந்த்பீபி என்னும் மற்ற வீரப் பெண்மணிகள் இவ்வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்கள். நம் தமிழ் நாட்டிலும் இவரைப் போன்ற வீரத் தாய்மார்கள் பலர் விளங்கியிருந்ததைப் பழந்தமிழ் நூல்கள் வாயிலாக நன்கு அறியலாம்.

---

**I விஞக்கள் :**

1. லக்ஷ்மிபாய் ஆங்கிலேயரை எதிர்க்க ஏன் சமயம் பார்த்திருந்தார் ?
2. சிப்பாய்க் கலகத்திற்கு முக்கிய காரணம் என்ன ?
3. ஜான்ஸி போரைப் பற்றி எழுதுக.
4. ஜான்ஸி ராணியின் வீரத்தைப் பாராட்டி எழுதுக.

**II எதிர்ப்பதம் கூறுக :**

1. தொடங்கியது, வலிமை, மறுத்தல், புகழ்தல், தோல்வி, பெருமை.

வாக்கியங்களில் அமைக்க :

2. காட்டுத் தீப் போல, கைப் பற்றுதல், கடைசி துளி இரத்தம், அரசுரிமை.

**III அருஞ்சொற் பொருள் :**

மகவு — குழந்தை ; தருணம் — சமயம் ; கைப்பற்று — பிடி ; வீர சுவர்க்கம் — இறந்தபின் வீரர்கள் செல்லும் இடம்.

**IV கவனிக்க :**

இன்று + ஐ + கு = இற்றைக்கு ; பெருமை + புரட்சி = பெரும்புரட்சி ; தோற்று + ஓடினர் = தோற்றோடினர்.

---

# 4. தீப்பெட்டித் தொழில்

**முருகன் :** அப்பா, தீக்குச்சியின் நுனியில் கருமையாய் இருக்கிறதே அது என்ன? அதைத் தீப்பெட்டியின் ஓரத்தில் தேய்த்தால் ஏன் தீ உண்டாகிறது?

**தந்தை :** முருகா, தீக்குச்சியின் நுனியில் இருப்பது தான் தீப் பிடிக்கும் மருந்து. அதைத் தீப்பெட்டியின் ஓரத்தில் உள்ள மற்ருெரு மருந்தின் மீது தேய்த்தால் தீ உண்டாகிறது.

**முருகன் :** தீக்குச்சியில் இருப்பது என்ன மருந்து? பெட்டியின் ஓரத்தில் இருப்பது என்ன மருந்து?

**தந்தை :** தீக்குச்சியில் இருப்பது வெடியுப்பு; தீப் பெட்டியின் ஓரத்தில் இருப்பது சிவப்பு பாஸ்வரம் என்பது.

**முருகன் :** குச்சியை மட்டும் கீழே தேய்த்தால் ஏன் தீப்பற்றுவதில்லே?

**தந்தை :** பெட்டியின் மீதுதான் அது எரிவதற்கு ஏற்ற மருந்து இருக்கிறது. தரையில் அது இல்லாததிஞல் எரிவதில்லே. குச்சியில் இருக்கும் வெடியுப்பும் பெட்டியின் மீது இருக்கும் பாஸ்வரமும் சேர்ந்தால்தான் தீ உண்டாகும்.

**முருகன் :** அப்படியாஞல், குச்சியிலே வெடியுப்பையும் பாஸ்வரத்தையும் சேர்த்து வைத்துவிடுவது தானே? அப்பொழுது அதைத் தரையில் தேய்த்தாலும் தீ உண்டாகும் அல்லவா?

**தந்தை :** ஆம், அப்படிச் செய்யலாம். முன்பெல்லாம் அப்படித்தான் செய்து வந்தார்கள். ஆஞல், அத

ஞல் குச்சிகள் பெட்டிக்குள் ஒன்ருேடொன்று உராய்ந்து தாமாகவே தீப்பற்றிக் கொள்ளும். பெட்டி தவறிக் கீழே விழுந்தாலும் தீப்பிடித்துக் கொள்ளும். அது மிக அபாய மானது. ஆகவே அபாயமில்லாத தீக்குச்சிகளைச் செய்ய, வெடியுப்பையும் பாஸ்வரத்தையும் தனித்தனியே பிரித்து வைத்தார்கள்.

முருகன் : அப்பா, மத்தாப்புப் பெட்டியிலும் அப்ப டித்தான் மருந்துகளை வைத்திருக்கிருர்கள் அல்லவா? அக் குச்சியில் மட்டும் ஏன் அதிக ஒளி உண்டாகிறது?

தந்தை : ஆம், அதிலும் அப்படியேதான் மருந்து களைக் குச்சியிலும் பெட்டியின் ஓரத்திலுமாகப் பிரித்து வைத்திருக்கிருர்கள். அக் குச்சியில் அதிக ஒளி உண்டா வதற்கு அதிக மருந்தை வைத்திருக்கிருர்கள். அன்றியும் நன்ருக நிலைத்து எரிவதற்கு அதில் சிறிதளவு கந்தகமும் வைத்திருக்கிருர்கள்.

முருகன் : அப்பா, முன் காலத்திலும் மக்கள் இப்படித் தான் தீயை உண்டாக்கிஞர்களா? இவ்வளவு எளிதில் தீ உண்டாக்க அவர்களால் முடிந்ததா?

தந்தை : இல்லை; அவர்களுக்குத் தீ உண்டாக்குவது பெருந் தொல்லையாக இருந்தது. இயற்கையில் உண்டா கும் தீயை அவர்கள் அரிதின் முயன்று பெற்று, அதை அணையாமல் பாதுகாத்து வைத்திருந்தனர். மிகப் பழங் காலத்திலிருந்த மக்கள் இங்ஙனமே செய்தனர். பிறகு வாழ்ந்தவர்கள், சிகிமுகிக் கற்களை ஒன்ருேடொன்று தாக் கித் தீப்பொறி யுண்டாக்கி அதைப் பஞ்சில் பிடித்துத் தீ உண்டாக்கினர். மற்றும் சிலர் தீக்கடை கோல்களால் மரத்தில் கடைந்து தீயை உண்டாக்கிஞர்கள்.

முருகன் : அப்பா, அக்கால மக்கள் தீ உண்டாக்கு வதற்கு இவ்வளவு அரும்பாடு படவேண்டியிருந்ததா!

நாம் இப்பொழுது தீ உண்டாக்கும் முறைக்கும் அப் பண்டை முறைக்கும் எவ்வளவு வேற்றுமை இருக் கிறது! அப் பழைய முறையோடு ஒப்பிட்டால் இப் பொழுது நாம் தீ உண்டாக்கும் முறை, ஒரு மாய ஜால வித்தை என்றே எனக்குத் தோன்றுகிறது. சரி, அப்பா. தீப்பெட்டியை எங்கு யார் முதலில் செய்தனர்? அவர்கள் பெரும் அறிவாளிகளாகவே இருக்க வேண்டுமல்லவா?

தந்தை: சுவீடன் நாட்டினர்தான் முதலில் தீப் பெட்டி செய்தனர். வெடிமருந்தில் உள்ள பொருள்களை வேகமாகத் தாக்கினல், அது தீப்பற்றி எரியும் என்பது யாவருக்கும் முன்பே தெரிந்திருந்தது. அப்பொருள்களை எளிய முறையில் சிறிய அளவில் குச்சிகளின் நுனியில் வைத்து வேண்டும்போது தீ உண்டாக்கலாம் என்ற உபா யத்தை அவர்கள் கண்டார்கள். அதற்கேற்றுற் போல் சுவீடன் நாட்டில் தீக்குச்சி செய்வதற்கேற்ற இலேசான மரங்கள் அதிக அளவில் பயிராகின்றன. அந்நாட்டினரே இன்றும் ஏராளமாகத் தீப்பெட்டிகளைச் செய்து மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

முருகன்: நம் நாட்டில் தீப்பெட்டி செய்யப்படுவதில் லையா?

தந்தை: இப்பொழுது இங்கும் அதிகமாக அது செய் யப்படுகிறது. சென்னை, சாத்தூர், சிவகாசி, திருவாங்கூர், ஆகிய இடங்கள் தீக்குச்சித் தொழிலுக்குப் பெயர் பெற்றவை.

முருகன்: இத்தொழிலைப் பற்றி எனக்குச் சற்று விளக்கிச் சொல்லுகிறீர்களா? அதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். நான் பெரியவனுனல் அத் தொழிலையே செய்யலாம் என்று நினைக்கிறேன்.

**தந்தை :** முருகா, உன் ஆர்வத்தைக் கண்டு மகிழ்கிறேன். சொல்கிறேன், கேள். இத்தொழிலேச் சிறிய அளவில் குடிசைத் தொழிலாகவும் பெரிய அளவில் இயந்திரத் தொழிலாகவும் செய்யலாம். குடிசைத் தொழில் முறையையே நான் உனக்கு இப்பொழுது கூறுவேன். தீப்பெட்டி செய்வதற்கு முதலில் வேண்டியது அதற்குரிய மரம். அது நம் நாட்டில் திருவாங்கூர் மலேயாளப் பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கிறது. மலே நாட்டிலுள்ள **கொல்லம்** தீக்குச்சி, தீப்பெட்டி, இவைகளுக்கு வேண்டிய மர வியாபாரத்துக்குப் பெயர் பெற்றது. அங்கிருந்து நாம், அளவாக வெட்டிய குச்சிகளேயும் மெல்லிய தகடு போன்ற பலகைகளேயும் நேராகத் தருவித்துக் கொள்ளலாம்.

**முருகன் :** சரி, மருந்துப் பொருள்கள் வேண்டுமே, அதற்கென்ன செய்வது ?

**தந்தை :** அவற்றை, அம்மருந்து வியாபாரிகளிடமிருந்து பெற வேண்டும். சென்னே, பம்பாய், கல்கத்தா, போன்ற பெரிய நகரங்களிலிருந்து நாம் அவற்றைத் தருவித்துக் கொள்ளவேண்டும்.

**முருகன் :** எல்லாவற்றையும் சேகரித்த பிறகு தீப்பெட்டியை எப்படிச் செய்வது ?

**தந்தை :** பொறு, விவரமாகச் சொல்கிறேன். முதலில் பெட்டிகளே ஒட்டி உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வேலேயைச் சிறுவரும்கூடத் தம் வீட்டில் ஒழிந்த நேரங்களில் விளேயாட்டாகச் செய்து விடலாம். இதன் மூலம் சிறிது ஊதியமும் பெறலாம். பிறகு தீக்குச்சிகளேச் சட்டங்களில் வரிசை வரிசையாக அடுக்கி வைப்பார்கள். ஒரு அகன்ற தொட்டியில் உள்ள உருகிய பாரபின் மெழுகில் (**Candle Wax**) அக் குச்சிகளே அப்படியே

தோய்த்தெடுப்பார்கள். இதனுல் அக்குச்சிகளுக்கு நின்று எரியும் தன்மையுண்டாகும். அதன் பின்னர் நீருடன் நன்கு அரைக்கப்பட்ட வெடியுப்புக் கலந்த தீக்குச்சி மருந்தை ஒரு அகன்ற தொட்டியில் இட்டு, மீண்டும் அக் குச்சிகளை அவற்றின் நுனியில் மட்டும் மருந்து படும்படி, தோய்த்தெடுப்பார்கள். பிறகு இச் சட்டத்தை உலர வைப்பார்கள். குச்சிகள் உலர ஒரு நாள் ஆகும். தீப் பெட்டியின் பக்கங்களிலும் மருந்தைத் தடவி உலர வைப் பார்கள். பிறகு தீக்குச்சிகளை யெடுத்து இப்பெட்டிகளில் அடுக்கி, மேலே ஒட்டி விடுவார்கள். அப் பெட்டிகள் பின் னர் கட்டப்பட்டு, ஒரு குரோஸ் கட்டுகளாக விற்பனைக்கு அனுப்பப்படும்.

முருகன் : குச்சிகளைப் பெட்டிகளில் அடுக்குவதும், பெட்டிகளைக் கட்டுகளாகக் கட்டுவதும் கூடச் சிறுவரே செய்து விடலாமன்றே? அது எளிதான வேலைதானே?

தந்தை : ஆம், தொழிற் சாலையில் சிறுவரும் பெண் களுமே இவ்வேலையைச் செய்கின்றனர். சிறு ஊர்களில் வேலையற்ற பல சிறுவரும் பெண்களும் இருப்பதால், இத் தொழிலை அங்கு குடிசைத் தொழிலாகச் செய்வது அவர் களுக்கு நன்மை பயப்பதாகும். பலருக்கு இத் தொழி லால் பிழைப்பு நடக்கும்.

முருகன் : ஆம், அப்பா. நான் பெரியவனுனல் தாங் கள் சொல்வது போலவே, பலருக்கு நன்மை தரும் இத் தொழிலை ஒரு சிற்றூரில் நடத்துவேன். இத்துணை விவ ரங்களைச் சொல்லி இத் தொழிலைச் செய்ய எனக்கு ஊக்க மூட்டினீர்கள். அதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சி யடை கிறேன். எனக்குப் பள்ளிக்கு நேரமாகி விட்டது. போய் வருகிறேன்.

## I வினாக்கள் :

1. தீக்குச்சியில் உள்ள மருந்தும், தீப்பெட்டியின் ஓரத்திலுள்ள மருந்தும் எவை ?
2. குச்சியை மட்டும் கீழே தேய்த்தால் ஏன் எரிவதில்லை ?
3. குச்சி மருந்தையும் பெட்டி மருந்தையும் ஒன்றாகச் சேர்த்து வைத்தால் என்ன ஆகும் ?
4. முற்கால மக்கள் எப்படித் தீ உண்டாக்கினர் ?
5. தீப்பெட்டித் தொழிலைக் குடிசைத் தொழிலாக ஏன் செய்ய வேண்டும் ?

## II பொருள் வேறுபாடுகளைக் கூறுக :

*தேர் — தேறு ; அரை — அறை ; சீரிய — சீறிய ; எரி — எறி ; பொறி — பொரி ;*

## III பிரித்தெழுது :

*ஒன்றோடொன்று, அரும்பாடு, தெரிந்திருந்தது, பெரியவனானால், தோய்த்தெடுப்பார்கள்.*

# 5. தந்தையின் கடிதம்

*10, வடக்கு மாசி வீதி,*
*மதுரை,*
*20—9—'53.*

*திருவளர் செல்வன் இளங்கோவுக்கு,*

*நலம். இன்று அஞ்சலில் உன் கடிதத்தை எதிர் பார்த்தேன்; யாது காரணத்தாலோ வரவில்லை. எப்பொழுது உனக்குப் பள்ளித் தேர்வு நடந்து முடியும்? நீ எப்போது வருவாய்? இச் செய்தி அறிய நாங்கள் ஆவலாய் இருக்கிறோம். எங்கள் நினைவெல்லாம் உன்மீதே இருக்கிறது.*

*நீ பள்ளியில் உன் பாடங்களை மிகுந்த ஆர்வத்துடன் பயின்று, நன்கு தேர்ச்சி பெறுவாய் என்று கருதுகிறேன். விளையாட்டுகளிலும் நீ கலந்து கொள்ள வேண்டுமென்பது எனது வேணவா. படிப்பையே முக்கியமானதாகக் கருதி நீ விளையாட்டை மறந்து விடாதே; உடல்வலிமை யின்றி வெறும் படிப்பினால் யாது பயன்? சுவர் வைத்துத்தானே சித்திரம் எழுதல் வேண்டும்? உடல் நன்றாக இருந்தால் தான் படிப்பையும் நன்கு பயில முடியும். சில பேர் விளையாட்டை மறந்து அல்லும் பகலும் புத்தகங்களிலேயே மூழ்கியிருப்பதால், உடல் நலமிழந்து நோய்களுக்கு இரையாவதை நீ உணர்ந்திருப்பாய்? நீயும் அது மாதிரி இருந்து விடக் கூடாதென்பதே என் கவலை.*

*அன்றியும் இச்சமயத்தில் நீ பிறரோடு பழகும் முறைகளையும் நான் உனக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நீ பலருடன் கலந்து பழகு. படிப்பு நேரம் போக எஞ்சிய*

நேரத்தில் நல்லவருடன் பழகுவதை ஒரு பொழுது போக்காகவும் கலையாகவும் நீ கருத வேண்டும். எப்பொழுதும் பிறருடன் சேராமல் புத்தகப் புழுவாகவே காலம் கழிக்காதே. நீ பள்ளியில் இருக்கும்போதுதான் பல திறப்பட்ட பிள்ளைகளைக் கண்டு பழக வாய்ப்பு உண்டாகிறது. பள்ளி என்பது ஒரு சிறிய உலகம். உலகத்திலுள்ள பல வகை மக்களும் ஓரளவுக்கு அதிலும் இருக்கிறார்கள். அவர்களிடத்து நீ உயர்வு தாழ்வு கருதாது கலந்து உறவாட வேண்டும். அப்படிச் செய்வது உனது பிற்கால வாழ்க்கைக்கு நலம் பயப்பதாகும். அவ்வாறு செய்யாவிட்டால் நீ பெரியவனான பிறகு பிறரிடம் எப்படி நடந்து கொள்வது என்று தெரியாமல் துன்புறுவாய். பள்ளி என்பது பலவகைப் பட்ட நல்ல பண்புகளுக்கும் பயிற்சிக் கூடம்; ஏட்டுக் கல்வி மட்டும் கற்கும் இடமல்ல. உனது பள்ளி வாழ்க்கையே உன்னைப் பிற்காலத்தில் உயர்ந்தவனாகவோ இழிந்தவனாகவோ செய்ய வல்லது. இதை நீ நன்கு உணர்ந்து, பள்ளியைத் தக்க முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

நீ பிறருடன் எப்படிப் பழக வேண்டுமென்பதைச் சற்று விவரமாகச் சொல்லுகிறேன், கேள். எப்பொழுதும் நீ ஒருவருடன் சொன்னபடி நடந்து கொள்ள வேண்டும்; எக்காரணத்தைக் கொண்டும் நீ சொல் தவறக் கூடாது. ஒருவரை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சந்திப்பதாகக் கூறியிருந்தால், அதன்படியே செய். ஒரு நிமிடம் கூட நீ அதில் காலம் தாழ்க்காதே. நேரந் தவறாமை என்னும் பண்புள்ள மனிதன், எக்காரியத்திலும் ஒழுங்காக இருப்பான்; வெற்றியும் பெறுவான். அவனது மற்ற பண்புகளையும் இதிலிருந்தே நாம் தெரிந்து கொண்டு விடலாம்.

அன்றியும் நீ செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளி வைக்கவோ, செய்யாமலிருக்கவோ கூடாது. அப்படிச்

செய்வது மிகத் தவறான குணம். சோம்பேறிகளும் காரியத்தில் கண் இல்லாதவர்களுமே அப்படிச் செய்வார்கள். சென்ற நேரம் திரும்பி வராது. நாளை நாளை என்று எதையும் தள்ளி வைப்பவன் அதை ஒருகாலும் செய்யவே மாட்டான். நேரத்தை வீணாக்குதல் கூடாது. ஒவ்வொரு நிமிடத்தையும் நல் வழியில் பயன் படுத்த வேண்டும். அதைப் பொன்னே போல் போற்ற வேண்டும்.

பிறரிடம் பழகும்போது நீ, மிகவும் மரியாதையாக இருக்க வேண்டும். பணிவு, அடக்கம், மரியாதை ஆகியவை மிக உயர்ந்த பண்புகள். யாவரிடத்தும் பணிவாகவும் இனிமையாகவும் பேச வேண்டும். கடுஞ் சொல், இழிவான மொழிகள், ஆகியவற்றை நீ, அறவே நீக்க வேண்டும். மரியாதை என்பது பேச்சில் மட்டும் இருந்தால் போதுமா? நடத்தையிலும் இருக்க வேண்டும். யாராவது உன்னிடம் பேச வந்தால் எழுந்து நின்று, அவர்களுக்கு உட்கார இடம் கொடு. பெரியவர்கள் நிற்கும் போது, நீ உட்காராதே. உனது நண்பர்களிடத்தும் நீ இது போலவே நடந்து கொள்ள வேண்டும். உன்னிடம் வருபவர்களுக்கு இயன்றால், பானம், உண்டி முதலிய ஏதேனும் கொடு. அவர்கள் தாமாக எழுந்து போகும் வரை, நீ அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பாதே.

மற்றவர்களுடைய உணர்ச்சிகளையும் நீ மதிக்க வேண்டும். அவர்கள் மனம் புண்படும் படியாக எதையும் பேசவோ செய்யவோ கூடாது. அவர்கள் எண்ணுவது, சொல்வது, செய்வது இவற்றில் தவறு இருந்தாலும், நீ அதற்காக அவர்கள் வருந்தும்படி ஒன்றும் செய்யக் கூடாது. உன் மனம் வருந்தும்படி அவர்கள் செய்தால் உனக்கு எப்படி யிருக்கும்? அது போலவே தான் அவர்களுக்கும் இருக்கு மென்று நீ நினைக்க வேண்டும். இயன்றால் பிறர் மனமறிந்து அதன்படி நட; இல்லா விட்டால்

வாளா இருந்து விடு; அவர்கள் மனம் நோக ஒன்றும் செய்யாதே.

பிறருக்கு நீ எப்பொழுதும் உதவுபவனாய் இருக்க வேண்டும். இதற்கு நீ முதலில் உன் காரியங்களைச் செய்யப் பிறர் உதவியை நாடாமலே நீயே செய்ய வேண்டும். தனக்குத் தானே உதவாதவன் பிறருக்கு எப் படி உதவ முடியும்? 'தன் கையே தனக்கு உதவி'. தன் முயற்சி யுடையவனுக்குத் தெய்வமும் துணையாக நிற்கும். நீ இப்போது தன் முயற்சி உடையவனாய் இருப்பாயானால் நீ பிற்காலத்தில் சிறந்த பொது நல ஊழியனாகவும் தேச பக்தனாகவும் விளங்குவாய். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று புகழும்படி தம் நலத்தையும் மறந்து பிறர் நலத்தையே பேணும் பெரியோர் ஒவ்வொரு நாட்டிலும் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களைப் போல வாழ வேண்டும் என்பது உனது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

நான் விளையாட்டைப் பற்றி முன்பே குறிப்பிட்டுள் ளேன். விளையாடி உடல் உறுதி பெற்றால் மட்டும் போதாது. விளையாட்டிலும் நீ உயர்ந்த பண்புகளைக் காட்ட வேண்டும். அதில் சுயநலம் காட்டக் கூடாது. சுயநலமற்ற விளையாட்டு மனப் பான்மையை உண்டாக் கிக்கொள். "விளையாட்டு வீரன்" என்று நீ பெயர் வாங்க வேண்டுமானால், விளையாட்டில் ஒருவருக்கும் தீங்கும் வஞ் சகமும் அநீதியும் இழைக்காமல் இருக்க வேண்டும். நீ வெற்றியில் வீரனாக விளங்க விரும்புவது போலவே, தோல்வியிலும் மனந்தளராத வீரனாக விளங்கப் பழகிக் கொள்ள வேண்டும். விளையாட்டில் வெற்றி தோல்வி இரண்டும் ஒன்றே என்ற மனநிலை உனக்கு உண்டாக வேண்டும். வெற்றி பெற்ற போது அதிக மகிழ்ச்சியும்

தோல்வியுற்றபோது அதிகமான வருத்தமும் கொள்ளக் கூடாது. விளையாட்டிலும் பிறருக்கு விட்டுக் கொடுக்கும் தன்மை மிகச் சிறந்தது. வீரமாகவும் தாராளமாகவும் பிறருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். விளையாட்டில் பழகிக் கொள்ள வேண்டிய அருங்குணங்கள் இன்னும் பல உண்டு. அவற்றை நீ அநுபவத்தில் அறிவாய். நல்ல "விளையாட்டு வீரனாய்" இருப்பவன் உலகத்திலும் நல்ல மனிதனாக விளங்குவான். அவனிடம் நற் பண்புகள் பல விருக்கும். அவன் பிற்காலத்திலே பெருந்தன்மையுள்ள வனாக விளங்குவான்.

உன் நன்மையில் எனக்குள்ள ஆர்வத்தினாலேயே இவ் வாறு நீண்ட கடிதம் உனக்கு எழுதலானேன். நீ வருவ தற்கு முன் கடிதம் எழுது. உனக்கு ஏதாவது வேண்டி யிருந்தாலும் எழுது. நலம்.

இங்ஙனம்,
உனதன்புள்ள தந்தை,
**K.** கண்ணபிரான் பிள்ளை.

திருவளர் செல்வன் இளங்கோ
முதல் படிவம், ஏ. பிரிவு,
இந்து உயர்நிலைப் பள்ளி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

I **வினாக்கள்** :

1. எப்பொழுதும் படித்துக்கொண்டிருப்பதால் தீங்கு என்ன?
2. பிறரோடு எப்படிப் பழக வேண்டும்?
3. பள்ளி வாழ்க்கை எத்தகையது?
4. தன் முயற்சியினால் உண்டாகும் பயன் என்ன?
5. நேரந் தவறாமையின் நன்மை என்ன?

6. விளையாடுவது ஏன் அவசியமானது?
7. மரியாதையாகப் பழகுவது எப்படி?
8. காலத்தின் அருமை எத்தகையது?
9. விளையாட்டு வீரனுடைய பண்புகள் யாவை?

## II இப்பாடத்திலுள்ள மாறுபட்ட சொற்றொடர்களைக் கவனி:

1. (உ — ம்) அல்லும் பகலும், வெற்றி தோல்வி, உயர்வு தாழ்வு.

இவற்றைப் போல் இன்னும் சில தொடர்களை எழுது.

சரியான வாக்கியங்களாக மாற்றி எழுது:

2. மக்களும் பலவகை உலகத்தில் பள்ளியிலும் உள்ள ஓரளவுக்கு இருக்கிறார்கள்.

குணம் தள்ளிப் போடுதல் தவறான எதையும் மிக.

## III அருஞ்சொற் பொருள்:

அல் — இரவு; வேணவா — மிகுந்த ஆசை; அஞ்சல் — தபால்; இழிந்தவன் — தாழ்ந்தவன்; பிறர்க்குரியாளன் — பிறருக்கே உரிமையாக இருப்பவன்; பேணும் — போற்றும்; குறிக்கோள் — உயர்ந்த நோக்கம்.

# 6. தோதவர்கள்

பழந் தமிழ் நாட்டில் மக்கள் நிலத்தை ஐந்து வகைகளாகப் பிரித்திருந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமும். முல்லை என்பது காடும் காடுசார்ந்த இடமும். மருதம், வயலும் வயலை அடுத்துள்ள இடமும். நெய்தல், கடலும் கடலை யடுத்த இடமும். பாலையாவது வளமற்ற இடம். இந் நிலங்களில் வாழும் மக்களை முறையே குறவர், ஆயர், உழவர், பரதவர், வேட்டுவர் எனச் சொல்வார்கள். இவர்களுள் குறவரை மிகப் பழமையான மக்கள் என்று சிலர் கருதுகிறார்கள்.



தோதவர்

இக் காலத்திலும் சில பழங்குடிகள் நம் நாட்டில் மலைகளில் இருக்கின்றனர். ஆதலால் அவர்களைக் குறவர் என்னும் குறிஞ்சி நில மக்களாகவே நாம் கருதவேண்டும். தமிழ் நாட்டில்நீலகிரி

மலையில் தோதவர், இருளர், படகர், குறும்பர், கோடர் என்னும் பல வகைப் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகி றார்கள். அவர்களுடைய வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் முதலியன, அறிந்து இன்புறத்தக்கன. இங்கு அவர்களுள் தோதவர்கள் என்பாரைப் பற்றிப் பார்ப்போம்.

நீலகிரி மலை தமிழ் நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலை யும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் கூடுமிடத்தில் உள்ளது. இதுவே இத் தொடர் மலைகளுள் மிக உயர்ந்த பகுதி யாகும். இதன் உயரம் சுமார் 8000 அடி. இம் மலையில் தான், கோடை இருப்பிடங்களாகிய உதகமண்டலம், கூனூர், கோடகிரி முதலியவை உள்ளன. இது மிக இயற்கை எழிலும் வளமும் வாய்ந்த மலை. குறிஞ்சி வளம் அனைத்தும் இதில் ஒருங்கே உள்ளது. இக் காலத் தில் தேயிலை, காப்பி, முதலிய தோட்டப் பயிர்களும் இங்கு அதிகமாக விளைவிக்கப்படுகின்றன. பலவிதமான பழ வகைகளும் பயிராக்கப்படுகின்றன.

இதில் வாழும் தோதவர்கள் பெரும்பாலும், இன்றள வும் நாகரிகமற்றவர்களாகவே காணப்படுகின்றனர்; இவ் வகையினருள் தோதவர்களே மிகப் பழமையானவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இவர்களைத் தோடர், தொத வர் என்றும் அழைப்பதுண்டு.

தோதவர்களே முற்காலந் தொட்டு இம் மலையில் வாழும் மற்ற வகுப்பினருக்குத் தலைவர்களாக இருந்து வந்தனர். மற்ற வகுப்பினர் இவர்களுக்குக் கப்பம் கட்டி வந்தார்கள். இக் காலத்தில் இக் கப்பம் கட்டும் வழக்கம் நின்று விட்டது. தோதவர்களுள் சில உட்பிரிவுகளும் உண்டு. அவ்வுட்பிரிவுகளுக்கு பைகி, பெக்கன், குட்டன், கென்னு, தோடி என்று பெயர். இவர்களுள் அதிக வேற் றுமை இல்லை. ஒருவர் மற்றொருவர் வீட்டில் உணவு உண்

பார்கள்; பெண் கொடுப்பதும் கொள்வதும் மட்டும் இல்லை. ஒவ்வொரு பிரிவினரும் தங்களுக்குள்ளேயே மணம் செய்து கொள்வார்கள்.

தோதவர்கள் பேசும் மொழி திராவிட மொழிக் கூட்டத்தைச் (தமிழினத்தை) சேர்ந்த ஒரு பழைய மொழி. அதைத் தமிழும் கன்னடமும் கலந்ததாகக் கருதலாம். அது மிகத் திருந்திய மொழியல்ல. அது எழுத்து இல்லாத மொழி; பேச்சு வழக்கில் மட்டும் உள்ளது.

இம் மக்கள் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர்கள். மலை வாழ்க்கையே இவர்களுக்கு இப்படிப்பட்ட உடலமைப்பைத் தந்திருக்கிறது. இவர்களது நிறம் கருமை. பெண்



தோதவர் குடிசைகள்

பாலார் பொது நிறம் பொருந்தியவர்கள். ஆடவர் நீண்ட தலை மயிரையும் தாடியையும் வளர்த்துக் கொண்டிருப்பார்கள்; உடல் மீது ஒரு பெரிய ஆடையைப் போர்த்தி யிருப்பார்கள். இக் காலத்தில் சிலர் தலைப்பாகையும் அணிகி

ருர்கள். ஆண்களும் பெண்களும் தம் உடலில் எப்பொழுதும் நெய்யைப் பூசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் பனி மிகுந்த மலேயில் வாழ்வதால், பனியினுல் தோலில் வெடிப்புகள் ஏற்படாமலிருக்க இவ்விதம் உடம்பில் நெய் பூசிக் கொள்கிருர்கள்.

தோதவர்களது தொழில் எருமைகளே மேய்ப்பதும், பால் பண்ணேகளே நடத்துவதுமாகும். எருமைகளே அவர்களது செல்வம். அவ் வெருமைகளே அவர்கள் தெய்வமாகவும் கருதுகிருர்கள். அவர்கள் பண்ணேயில் பால், நெய் முதலியவற்றை உற்பத்தி செய்து விற்கிருர்கள். இத் தொழிலேத் தவிர உழவு முதலிய வேறு எத் தொழிலேயும் அவர்கள் முக்கியமானதாகக் கருதுவதில்லே. அவர்களது பண்ணேகளே அவர்கள் மிகப் புனிதமான இடங்களாக மதிக்கின்றனர். அவற்றுள் அந்நியர்களேயும் பெண்களேயும் அவர்கள் செல்ல விடுவதில்லே

அவர்களது குடியிருப்புகள் ஐயைந்து குடிசைகளாகவே அமைந்திருக்கும். அவற்றுள் மூன்று குடிசைகளே உறைவிடங்களாகவும், ஒன்றைப் பண்ணேக்காகவும், மற்றென்றைக் கன்றுகளுக்காகவும் அவர்கள் பயன் படுத்துவார்கள். ஒவ்வொரு குடியிருப்பிலும் உறவினர்கள் அனேவரும் சேர்ந்தே வாழ்வார்கள். ஐந்து குடிசைகள் சேர்ந்த ஒரு குடியிருப்பிற்கு "மாண்டு" (கிராமம்) என்று பெயர். ஒவ்வோர் கிராமத்திலும் புல்லால் வேயப்பட்டு, நீண்டு உயர்ந்த கோபுர அமைப்புள்ள கோயில் ஒன்று உண்டு.

அவர்களிடம் சில குறிப்பிடத்தக்க பழக்க வழக்கங்கள் உண்டு. பெண் ஒருத்தி தக்க வயது வந்தவுடன் தானே தனக்கு வேண்டிய கணவனேத் தேர்ந்தெடுத்துக்

கொள்வாள். மணமகள் மணமகன் வீட்டிற்குச் சென்றதும் அவன் முன்னிலையில் அவள் தலை குனிந்து நிற்பாள். அப்பொழுது மணமகன் அவள் தலைமீது தன் பாதத்தை வைத்துப் பிறகு பரிச மளிப்பான். பின்னர் ஒரு விருந்து நடக்கும். இத்துடன் மணவினை முடிவடையும்.

தோதவர்கள் இறந்தவர்களுக்கு ஈமக் கடன்களை அதிக ஆடம்பரமாகச் செய்வார்கள்; ஆடல் பாடல் நடனம் முதலியவற்றுடன் அவற்றை விழாப் போலவே கொண்டாடுவார்கள். ஆண்டுக் கொரு முறை அவர்கள் தம் கோயில்களில் பலியிட்டு விழா நடத்துவார்கள். அவர்கள் தீ மூட்டத் தீக் குச்சியை உபயோகிப்பதை இழிவாகக் கருதுகிறார்கள். பழைய வழக்கப்படி தீக்கடை கோல்களாலேயே தீ மூட்டுவார்கள். பச்சை குத்திக் கொள்ளும் வழக்கமும் அவர்களிடம் உண்டு.

இக் காலத்தில் இவர்கள் பிற மக்களுடன் பழகிச் சிறிது சிறிதாக முன்னேறி வருகின்றனர். இவர்களது நலனுக்காக அரசாங்கமும் ஆவன செய்து வருகிறது. இவர்களது கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் சிறப்பாகக் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. இவர்கள் விரைவில் முன்னேறி நாகரிக மடைவார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் இப்போது காணப்படுகின்றன.

---

**I வினாக்கள் :**

1. தமிழ் நாட்டுப் பழங் குடிகள் எவர் ?
2. நீலகிரியைப் பற்றி ஓர் குறிப் பெழுதுக.
3. நீலகிரியில் வசிக்கும் பழங் குடிமக்கள் யாவர் ?
4. அவர்களின் சில பழக்க வழக்கங்களைக் கூறுக.

## II சொந்த வாக்கியங்களில் அமைக்க

1. இன்றளவும், பழக்கவழக்கம், உடற்கட்டு, குறிப்பிடத் தகுந்த, ஆடம்பரம்.

## பிரித்தெழுதுக :

2. பழங்குடி, ஐயைந்து, பரிசமளிப்பான்.

## III அருஞ்சொற் பொருள் :

எழில் — அழகு ; பொது நிறம் — கருமைக்கும் செம்மைக்கும் பொதுவான நிறம் ; பரிசம் — பணப் பரிசு ; ஈமக்கடன் — இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்கு.

# 7. நிலக்கரியின் சுய சரிதை

என்னை உங்களுக்குத் தெரியுமா? ஒருகால் உங்களுள் சிலருக்கு என்னைத் தெரியாமல் இருக்கலாம். நாட்டுப் புறங்களில் உள்ள பேர்கள் ஒருவேளை என்னைக் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் புகை வண்டியில் சென்ற அனைவருக்கும் என்னைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். புகை வண்டியில் நீரை ஆவியாக்கி அவ் வண்டியைச் செலுத்துவது நானே. அதன் என்ஜின் அருகில் நின்று பார்த்தீர்களானால் நான் செய்யும் வேலை உங்களுக்குத் தெரியும். நான் 'கண கண' வென்று எரிந்து நீரை விரைவில் ஆவியாக்குகிறேன். ஆனால் நான் அங்கு எப்படி வந்தேன் என்பது ஒரு பெரிய கதை.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நான் நிலத்தின் மீது மரமாய் இருந்தேன். எனது மூதாதை ஓர் மரம். அதைப்போல பல மரங்கள் ஓங்கி வளர்ந்து பூமி மீது அடர்ந்த காடுகளாக விருந்தன. சில சமயங்களில் நிலத்தில் உண்டாகும் நடுக்கம், பிளவு, ஏற்றத்தாழ்வு போன்ற இயற்கை நிகழ்ச்சிகளால், அக் காடுகள் நிலத்திற்குள் புதைந்து விட்டன. புதையுண்ட மரங்கள் நிலத்தின் அடியில் பல ஆயிரம் ஆண்டுகளாக அமுக்குண்டு கிடந்தன. மேலே மண் மூடிவிட்டது. காடுகள் அடியில் புதைந்து கிடப்பது ஒருவருக்குமே தெரியாமல் போய் விட்டது. அவை, மேலே உள்ள மண்ணின் அழுத்தத்தால் சிதைந்து உருக்குலைந்து வேறு பொருளாக மாறி விட்டன. இம் மாறுதல் சிறிது சிறிதாகப் பல ஆயிரம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. இங்ஙனம் நான் நிலத்தின் அடியில் உருவானேன். ஆகவே எனக்கு நிலக்கரி என்று பெயரிட்டனர்.

பிறகு யாரோ ஒருவர் நிலத்தைத் தோண்டிக் கொண்டிருக்கும்பொழுது தற்செயலாக என்னைக் கண்டார். என்னைத் தொட்டவுடன் அவர் கை கருமையாகி விட்டது. என்னிடமிருந்து ஒருவகை நாற்றம் வீசுவதையும் அவர் கண்டார்; நான் சாதாரண விறகுக் கரியைப் போல இல்லாமல் மிகக் கடினமாகவும் பளபளப்பாகவும் இருப்பதைப் பார்த்தார். பிறகு என்னை நொறுக்கித் தூளாக்கிப் பார்த்தார். அப்பொழுது எனக்குண்டான வலியையும் துன்பத்தையும் சொல்லவும் வேண்டுமோ? நான் அவர் கையில் பட்டபாடு நமன் கையிற் பட்ட பாடே. என்னை அவர் பிறகு தீயில் காய்ச்சிப் பார்த்தார். நான் அதிக ஒளியும் வெப்பமும் தந்து எரிந்ததுமட்டு மன்றி, ஒரு வாயுவையும் வெளி விட்டேன். அவ் வாயு தீப்பற்றி எரியும் தன்மையுடையது என்பதையும் அவர் கண்டார். அன்று முதல் அவர் என்னை விறகுக்குப் பதிலாக எரித்தார். என் வாயுவை, எண்ணெய்க்குப் பதிலாக விளக்கெரிக்கப் பயன்படுத்தினர். நெடுங்காலமாக நான் யாவருக்கும் இவ்விரு காரியங்களுக்கே பயன் பட்டு வந்தேன். இந்தக் காலத்திலுங் கூட நான் இவ்வாறே சிலரால் பயன் படுத்தப்பட்டு வருகின்றேன். இரும்புத் தொழிற் சாலைகளிலும் மற்றும் பல பெரிய தொழிற்சாலைகளிலும் இன்று இன்றியமையாத நண்பனாக நான் விளங்குகிறேன்.

நாளடைவில் நான் பல்வேறு புதுப்புது வழிகளில் மக்களுக்கு உபயோகப்பட்டு வருகிறேன். நான் தற்பெருமையாகச் சொல்லிக் கொள்ள வில்லை. என்னைப் பல விதமாக மக்கள் பயன் படுத்துவது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. என்னைச் சின்னம்பட உடைத்து வருத்தினும் நான் நன்மையே செய்து வருகிறேன். "பல்லார் பயன் துய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே, நல்லாண் மகற்குக் கடன்" என்பது பெரியோர் வாக்கன்றோ? நீங்

களும் அவ்வாறே வருந்தியாயினும் பிறருக்கு உதவ வேண்டும் என்பது என் அவா. அதற்காகவே நான் என் கதையை உங்களுக்குச் சொல்லுகின்றேன். என்னை இப் பொழுது "அதிசயப் பொருள்" என்று யாவரும் புகழ் கிறார்கள். நான் எப்படி அப் பெயருக்கு இலக்கானேன் என்பதைப் பாருங்கள்.

என்னிடமிருந்து மூவாயிரத்துக்கு மேலான பொருள் கள் கிடைக்கின்றன. என்னைக் காய்ச்சினால் கருமையான தார் என்னும் கசிவுப் பொருள் கிடைக்கின்றது. அதனை முன்பெல்லாம் வீணாக்கி வந்தார்கள். இப்பொழுது அதி லிருந்து அளவற்ற பொருள்களைச் செய்கிறார்கள். பலவித மருந்துப் பொருள்களும், வர்ணங்களும், வார்னிஷ்களும். வெடிமருந்துகளும் அச்சடிக்க உதவும் மையும் அதிலிருந்து எடுக்கப்படுகின்றன. எருக்களாக உதவும் அம்மோனியம் சல்பேட்டு. அம்மோனியம் நைட்ரேட்டு ஆகியவை நான் தந்தவையே. தண்ணீரில் நனையாத ஆடைகளும் என் உதவியால் செய்யப்படுகின்றன. சாலைகள் மீது சரளைக் கற்களை உறுதியாகப் பாவுவதற்குத் தார், பயன்படுவது நீங்கள் அறிந்ததே. மரச் சாமான்கள் கறையான், நீர் முதலியவற்றால் சேதமடையாமல் இருக்க அவற்றின் மீது தார் பூசப்படுவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். பூச் சியைக் கொல்லும் மருந்தாகிய "அந்துருண்டை"யும் என்னிடம் பிறந்ததே. பிளாஸ்டிக் என்னும் புதுப் பொருளால் செய்யப்பட்ட பலவகைப் பொம்மைகள், தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியவற்றை நீங்கள் இப் பொழுது எங்கும் காணலாம். அப்பிளாஸ்டிக் செய்யவும் நான் உதவுகிறேன்.

மற்றொரு அதிசயம்! நான் எத்துணை கருமையாகவும் வெறுக்கத் தகுந்தவனாகவும் இழி நாற்றம் உள்ளவனாகவும்

இருக்கிறேன்! ஆயினும் என்னிடமிருந்தே பல உயர்ந்த நறுமணங்கள் உண்டாக்கப் படுகின்றன. தீய நாற்ற முள்ள பொருளிலிருந்து நறுமணப் பொருள் கிடைப்பது நம்ப முடியாத ஒரு அதிசயம் என்று தானே நீங்கள் நினைப்பீர்கள்? குப்பையிலும் மாணிக்கம் தோன்று மென்பார்கள். அது போன்றதே இதுவும். வெண்ணெய் கூட என்னிடமிருந்து எடுக்கப் படுகிறதென்ருல் அது விந்தையே. சோடா பானங்களில் சேர்க்கப்படும் 'சாக் கரைன்' என்னும் இனிப்புப் பொருளும் என்னிடம் உண் டாவதே. சுருக்கமாகச் சொன்னல் நான் உங்களுக்கு எண்ணற்ற வழிகளில் உதவுகிறேன்.

இங்ஙனம் நான் பல பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், கொள்பேரப் பிள்ளைகள் முதலிய சுற்றத்தோடு கிளை விட்டுப் படர்ந்து உலகில் யாவருக்கும் உதவுவது பற்றி எனக்குப் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் உண்டா கின்றன. கருமையாய் இருந்தால் என்ன? கண்டோர் வெறுக்கும் வண்ணம் இருந்தால் என்ன? என் கட மையை நான் செய்கிறேன். யாவருக்கும் பயன்பட நான் வாழ்கிறேன்.

நிற்க. உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. நீங்கள் இத்தனை நாளும் என்னை அயல் நாடுகளிலிருந்தே அதிகமாகப் பெற வேண்டியிருந்தது. வட இந்தியாவில் வங்காளத்திலும் அதனருகில் ஓரிரு இடங்களிலும் நான் வாழ்ந்து வருகிறேன். ஆனல் இப்பொழுதோ நான் தமிழ் நாட்டிலும் தங்கி யிருக்கின்றேன் என்பதைச் சொன்னல் நீங்கள் மிக்க மகிழ்ச்சி யடைவீர்கள். தென் ஆர்க்காடு ஜில்லாவில் நெய்வேலி என்னுமிடத்தில் நிலத்தி னடியில் நான் புதைந்து கிடந்ததைக் கண்டுபிடித்து, என்னை வெளியிலெடுத்து மக்கள் பயன் படுத்தத்

தொடங்கி விட்டார்கள். விரைவில் நான் என் செல்வ மனைத்தையும் தமிழ்ப் புதல்வர்களாகிய உங்களுக்கு அள்ளி வீசப் போகிறேன். என்னைப் பல வகையிலும் பயன்படுத்தி நீங்கள் நன்மை யடைவீர்களாக.

---

**I வினாக்கள் :**

1. நிலக்கரி எப்படி உண்டாகிறது ?
2. அது முதலில் எக்காரியங்களுக்குப் பயன் பட்டது ?
3. அதிலிருந்து கிடைக்கும் முக்கியமான பொருள்கள் சில சொல்லுக.
4. நிலக்கரி எங்கெங்கு கிடைக்கிறது ?
5. அதன் கதையிலிருந்து நீங்கள் அறியும் நீதி யாது ?

**II· பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :**

1. கரி — கறி ; பொரி — பொறி ; எரி — எறி ; அரிய — அறிய ; அரம் — அறம் ; மரம் — மறம்.

பின் வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:

2. நிலக்கரி ——— என்று எரிகிறது. அது அதிக ——— ——— தருகிறது. நிலக்கரியைக் காய்ச்சினால் ——— என்னும் ——— பொருள் உண்டாகிறது. அதைச் ——— வருத்தினாலும் அது ——— தருகிறது. அதிலிருந்து ——— மேற்பட்ட பொருள்கள் கிடைக்கின்றன.

**III அருஞ்சொற் பொருள் :**

பன்னூறு — பலநூறு ; நமன் — யமன் ; சின்னம்பட — சிதையுமாறு ; பல்லார் — பலர் ; துய்ப்ப — அநுபவிக்க ; அவா — விருப்பம் ; பாவுதல் — பரப்புதல்.

---

# 8. உலகத்தைச் சுற்றி முதற் கடற் பயணம்

உலகத்தில் சிலர் செயற்கரிய செயல்களைச் செய்து புகழ் பெறுகின்றனர். அதன் பொருட்டு அவர்கள் தம் உயிரையும் பெரிதாகக் கருதாது இடுக்கண்களுடன் போராடி வெற்றி பெறுகின்றனர். அன்னவர்களால் பல புதுமைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவர்களுள் கடலில் புது வழிகளைக் கண்டு பிடித்தவர்களும், துருவங்களைக் கண்டவர்களும், எவரெஸ்டு போன்ற மலையுச்சிகள் மீது ஏறியவர்களும் இருக்கிறார்கள். இப்பாடத்தில் முதல் முதலாகக் கடலில் புது வழி கண்டுபிடித்து உலகத்தைச் சுற்றிக் கப்பலிலேயே வரமுயன்ற மெஜல்லன் என்பவரைப் பற்றிச் சிறிது படிப்போம்.

உலகத்திலேயே மிகப் பெரிய பரப்புள்ள கடல்கள் பசிபிக், அட்லாண்டிக் என்னும் இரண்டுமேயாகும். அவை இரண்டும் முறையே அமெரிக்கக் கண்டங்களின் மேற்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ளன. ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கிச் சென்றால் முதலில் அட்லாண்டிக் பெருங் கடலைக் கடந்து பிறகு தென் அமெரிக்காவைச் சுற்றிப் பசிபிக் பெருங் கடலை யடைய வேண்டும். மெஜல்லனுக்கு முன்பு ஒருவரும் இவ் வழியில் சென்றதில்லை. என்றாலும் பலருக்கு இவ்வாறு செல்ல வேண்டுமென்ற எண்ணம் இருந்து வந்தது. இக் கடற் செலவின் தூரம், அருமை, முதலியவற்றைக் கருதி ஒருவரும் இதனை மேற்கொள்ளத் துணியவில்லை.

பெர்டினண்டு மெஜல்லன் என்பவர் 1480-ம் ஆண்டில் போர்த்துகல் நாட்டில் ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தார். இளம் வயதில் அவர் அந்நாட்டு அரசியிடம் பணியாளாக இருந்தார். பிறகு அரசியிடமே ஓர் உயர்ந்த வேலையில் அமர்ந்திருந்தார். அவ்வமயம் அந்நாட்டரசர் வாஸ்கோடகாமாவையும் மற்றும் சில மாலுமிகளையும், கடலில் புது வழி கண்டுபிடிக்குமாறு பொருளுதவி தந்தனுப்பினர். அதனை அறிந்த மெஜல்லன் தானும் அவ்வாறே கடல்மீது கப்பலில் சென்று புதுவழிகள் காண வேண்டுமென்னும் விருப்பம் உடையவரானர். 1504-ம் ஆண்டில் அவர் கப்பர் படையில் சேர்ந்து முதல் முறையாக இந்தியா முதலான கீழ் நாடுகளுக்குப் பயணமானர் சிலகாலம் இந்தியாவிலும் பிறகு கிழக்கிந்தியத் தீவுகளிலும் தங்கிவிட்டு அவர் 1512-ம் ஆண்டில் மீண்டும் தம் தாய் நாடு திரும்பினர்.

போர்த்துகல் நாட்டில் இருக்கும்போது அவர் அந்நாட்டின் அரசருடன் யாது காரணத்தாலோ பகைத்துக் கொண்டார். ஆதலால் அவ்வரசர் அவருக்குக் கடல்மீது சென்று புது வழி காணப் பொருளுதவி செய்ய மறுத்துவிட்டார். ஆதலால் மெஜல்லன் ஸ்பெயின் தேசத்திற்குச் சென்று ஐந்தாம் சார்லஸ் என்னும் அந் நாட்டரசரிடம், தாம் தென் அமெரிக்காவைச் சுற்றிச் சென்று கடலில் புதுவழிகள் கண்டுபிடிக்க விரும்புவதாகக் கூறிப் பொருள் உதவி கேட்டார். அவ்வரசர் அவரது கருத்தினை நன்கு ஆராய்ந்து அதற்கு இணங்கினர். அவர் மெஜல்லனுக்கு ஐந்து கப்பல்களையும் 235 மாலுமிகளையும், அவர்கள் யாவருக்கும் இரண்டாண்டுகளுக்கு வேண்டிய உணவையும் கொடுத்தார். 1519-ம் ஆண்டு செப்டம்பர் 20-ம் நாள் அவர்கள் ஸ்பெயின் தேசத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.




உலகத்தைச்சுற்றி முதற் கடற் பயணம்

அவர்கள் அட்லாண்டிக் பெருங் கடலை அடைந்ததும் கடும் புயற் காற்று வீசத் தொடங்கியது. எல்லோரும் பெருந் துன்பத்திற்குட்பட்டார்கள். மரக்கலங்கள் திசை தடுமாறிச் செல்லப் பின்பு அவர்கள் தென் அமெரிக்கா வின் கரையில் உள்ள பெர்னும்புகோ என்னுமிடத்தை அடைந்தார்கள். அங்கிருந்து அவர்கள் தென்மேற்காகக் கரையோரமாகவே சென்றூர்கள்.

இதற்கிடையில் மெஜல்லனுக்கு முதலிலிருந்தே பகை வராயிருந்த சில மாலுமிகள் அவரை எதிர்த்துக் கலகம் செய்யத் தொடங்கினூர்கள். அவர்களை யெல்லாம் மெஜல் லன் திறமையுடனும் துணிவுடனும் அடக்கி, மேலே சென்றூர். இக்கலகம் காரணமாக செயிண்ட் ஜூலியன் என்னுமிடத்தில் கப்பல்கள் இரண்டு மாதங்கள் தங்கிவிட நேர்ந்தது.

அங்கு அவர்கள் தங்கியிருந்தபோது அவ்விடத்து மக்கள் ஒருவரையும் காணவில்லை. ஒரு நாள் ஒரே ஒரு மனிதன் ஆடிப் பாடிக் களித்தவண்ணம் அவர்கள் அருகில் வந்தான். அவன் பைத்தியம் பிடித்தவன் போல் காணப்பட்டான். அவனுடன் அவர்கள் பேச முயன்றூர் கள். அவனுடைய மொழி அவர்களுக்குத் தெரியாதாகை யால், சிறிது நேரம் அவனைக் கண்டு களித்து அனுப்பி விட்டார்கள். அவன் உயரத்தில் அவர்களைப் போல ஒரு பங்கு அதிகம் இருந்தான். அவனருகில் அவர்கள் நின்ற போது, அவனுடைய இடுப்பளவே இருந்தார்கள். அவன் தனது முகத்திலும் மார்பிலும் பல நிறங்களைப் பூசிக் கொண்டும் தோலினுல் தைத்த ஆடைகளை அணிந்து கொண்டும் இருந்தான்.

பிறகு அவர்கள் அவ் விடத்தை விட்டுத் தெற்கு நோக்கிச் சென்று வழி காண முயன்றூர்கள். தென் அமெ

ரிக்காவின் தெற்குக் கோடியில் உள்ள பல சிறு சிறு தீவு களுக்கிடையே வளைந்து வளைந்து செல்லும் வழியொன்று காணப்பட்டது. அதில் செல்வது மிகக் கடினமாக இருந் தது. அவ் வழியில் செல்ல மறுத்த ஒரு கப்பல் தலைவன் மெஜல்லனைக் கைவிட்டுத் தன் கப்பலை ஓட்டிக்கொண்டு ஸ்பெயினுக்குத் திரும்பி விட்டான். பிறகு 1520-ம் ஆண்டு நவம்பர் 28-ம் நாள் மேற்கு நோக்கிச் செல்லும் வேறொரு வழியை அவர்கள் கண்டார்கள். அவ் வழி பிற் காலத்தில் மெஜல்லன் ஜலசந்தி யென்றே பெயர் பெற்று விட்டது. அதன் வழியாக அவர்கள் தென் பெருங் கடலை யடைந்து, பிறகு வடக்கு நோக்கிச் சென்று பசிபிக் பெருங் கடலை அடைந்தார்கள்.

அக்கடலில் கடுங்காற்று வீசி அவர்களை அலைத்தது. அதில் மூன்று கப்பல்கள் அகப்பட்டு வழி தெரியாமல் மூன்று மாதங்கள் வரையில் நடுக் கடலில் அலைந்து திரிந் தன. நான்காவது கப்பல் சென்ற இடம் தெரியவில்லை. நடுக் கடலில் இருக்கும்போது அவர்களுள் ஒருவருக்கும் தாங்கள் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பதும் எங்கு போய்க் கரை காண்போம் என்பதும் தெரியவில்லை. அவர்கள் கொண்டு வந்த உணவும் குடி தண்ணீரும் செலவழிந்து விட்டன. ஆகவே உணவும் நீரும் இல்லாது அவர்கள் தவித்தார்கள். நிலப் பகுதியே எங்கும் தென்படவில்லை. உணவில்லாமையால் பலர் விரைவில் நோய்க்கிரையாகி இறந்தார்கள்.

இவ்வாறாகப் பல துன்பங்களை அடைந்து இறுதியில் அவர்கள் லாட்ரோன்ஸ் என்னும் தீவிற்கு வந்தார்கள். தென்னமெரிக்காவை விட்டுத் தொண்ணூற்றெட்டு நாட் களுக்குப் பின்னரே அவர்கள் மீண்டும் நிலப் பகுதியைக் கண்டனர். இப்பொழுது அவர்கள் வந்த தீவில் இருந்த மக்கள் மிகவும் ஏழைகள். அவர்கள் திருடுவதையே தம்

தொழிலாகக் கொண்டவர்கள். அதனால் அத் தீவைத் 'திருடர் தீவு' என்றே அவர்கள் அழைத்தார்கள். அங்கு அவர்களுடன் பண்ட மாறிச் சிறிது உணவு பெற்றுப் பிறகு அவர்கள் பிலிப்பைன் தீவுகளில் ஒன்றை யடைந் தனர். அங்கிருந்த மக்கள் அவர்களுக்கு வேண்டிய உதவி களைச் செய்தனர். ஆனால் அத் தீவின் அரசனோடு மெஜல் லன் சண்டையிட்டுக் கொள்ளவே, அச் சண்டையில் மெஜல்லன் கொல்லப்பட்டார். மற்ற மாலுமிகளுக்கு இதனால் ஆற்றொணாத் துன்பம் உண்டாயிற்று. தம் வீரத் தலைவன் இறந்தது அவர்களுக்குப் பெரு நஷ்டமாக இருந்தது.

பின்னர் எஞ்சியிருந்த மாலுமிகள், இரண்டு கப்பல் களில் மேற்கு நோக்கிச் செல்லுகையில் இடை வழியில் ஒரு கப்பலைப் போர்த்துகீசியர் மறித்துக் கைப்பற்றிக் கொண்டார்கள். "விக்டோரியா" என்னும் மற்றொன்று மட்டும் ஆப்பிரிக்காவைச் சுற்றி ஸ்பெயினை நோக்கிச் சென்றது. அதில் உயிருடன் திரும்பியவர்கள் சுமார் 60 மாலுமிகளே. அவர்களுள்ளும் பதினெட்டுப் பேர் தவிர ஏனையோர் போர்த்துகீசியரால் சிறை செய்யப்பட்டனர். பதினெட்டுப் பேர் மட்டும், மிகவும் களைத்துப் போய்த் தம் தாய் நாட்டிற்குக் குற்றுயிருடன் திரும்பினார்கள். அவர் களை யாவரும் பாராட்டினார்கள்.

இவ்வாறு மெஜல்லன் தொடங்கிய பயணம் வெற்றி யுடன் முடிந்தது; ஆனால் முடிவாக அவ் வெற்றியைக் கண்டு மகிழாமல் இடை வழியில் அவர் இறந்தது இரங் கத் தக்கது. முன்பு ஒருவரும் இவ்வளவு பெரிய பய ணத்தை மேற்கொண்டதில்லை. இவ் வீரச் செயல் உலகத் தின் கடற் பயண வரலாற்றில் தலை சிறந்ததாகும். இவ் வரும் பெரும் முயற்சி, பிற்காலத்தில் கடலில் ஒரு நிலையான வழியைக் காண்பதற்கும் அயல் நாடுகளுடன்

தொடர்பு கொள்வதற்கும் பெரிதும் உதவியாக இருந்தது. ஐம்பது ஆண்டுகள் கழித்து மெஜல்லன் அடிச் சுவட்டில் பிரான்ஸிஸ் டிரேக் என்னும் பெருவீரன் உலகை இரண்டாம் முறையாகச் சுற்றி வந்தான். மற்றவர்களும் பிறகு எளிதில் இவ் வழியிலே கடற் பயணங்கள் செய்தனர். இன்று பசிபிக்கிலும் அட்லாண்டிக்கிலும் உள்ள கடல் வழிகள் மெஜல்லன் கொண்ட முயற்சியின் பயனேயாகும். இம் முயற்சியை, உலகத்தையே ஒன்றுபடுத்துவதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சி என்று உலகம் பாராட்டுகின்றது.

---

**I வினுக்கள் :**

1. மெஜல்லன் மேற்கொண்ட செயற்கரிய செயல் யாது?
2. அவர் எப்பொழுது எங்கிருந்து யாருடைய உதவியுடன் புறப்பட்டார்?
3. அவருக்கு உண்டான துன்பங்களேச் சுருக்கிக் கூறுக.
4. அவர் பயணத்தால் ஏற்பட்ட நன்மை யாது?

**II சொல்லியபடி செய்க :**

1. மெஜல்லன் துன்பம் நிறைந்த பயணத்தை மேற்கொண்டார். (பயணம் என்பதை எழுவாயாக்கி முடிக்க).
2. மெஜல்லன் அடிச் சுவட்டில் டிரேக் சென்ருர். (அடிச் சுவட்டில் என்பதற்குத் தகுந்த வேருேர் சொல்லே அமைக்க).

**III அருஞ்சொற் பொருள் :**

இடுக்கண் — துன்பம்; வேணவா — மிகுந்த ஆவல்; ஆற்ற ஒண்ணு — தாங்க முடியாத; பண்டமாறி — ஒரு பண்டத்தைக் கொடுத்து வேறு பண்டத்தை வாங்கி.

---

# 9. தவறிய குழந்தை

மதுரையில் சித்திரைத் திருவிழாவின் பத்தாம் திரு நாளுக்கு எங்கெங்கிருந்தோ மக்கள் திரள் திரளாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் புதிய ஆடைகளை யணிந்து மிக மகிழ்ச்சியுடனும் கிளர்ச்சியுடனும் காணப் பட்டனர். அக் கூட்டத்தில் ஒரு, மூன்று வயதுச் சிறுவன் தன் பெற்ருேர்களின் கால்களுக்கிடையில் ஓடி விளை யாடிச் சிரித்தவண்ணம் வந்து கொண்டிருந்தான். அவன் இடையிடையே பின் தங்கி வழியில் உள்ள கடைகளில் இருந்த பொம்மைகளைப் பார்த்தவண்ணம் வந்தான். "வாப்பா, குழந்தை வா" என்று அவன் பெற்ருேர்கள் அவனை அடிக்கடி கூப்பிட்டு அழைத்துக் கொண்டு சென்ற னர்.

அவன், பெற்ருேர் குரலைக் கேட்டவுடன் வேகமாக ஓடுவான். ஆனால் பின்னல் திரும்பித் திரும்பிப் பொம் மைகளைப் பார்த்தவண்ணம் செல்வான். அவன் அப் பொம்மைகளை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணி ஞன். ஆனால் அவன் பெற்ருேர்கள் வாங்கிக் கொடுக்க மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். அவன் தன் தாயார் கையைப் பிடித்துக் கொண்டு, 'அம்மா' என்று அழுதுகொண்டே வந்தான். அவன் மனதில் உள்ளதை மறக்கச் செய்ய அவள் "அதோ பார்; அங்கு என்ன இருக்கிறது?" என்று சொல்வாள்.

இப்படி அவர்கள் சென்று கொண்டிருக்கும்போது வழியில், வைகையாற்றைக் கடந்து, மேலே செல்ல வேண்டியிருந்தது. அவ்வாற்றில் நீர் இல்லையாதலால்

அதன் மணல் மேடுகளில் மக்கள் தங்கி யிருந்தனர். மக்களது மகிழ்ச்சி மிக்க ஆரவாரம் கடல் ஒலி போலிருந்தது. ஆற்றங்கரையில் சிறுவர்கள் ராட்டினங்களில் சுற்றிக் கொண்டிருந்தனர். ராட்டினத்தின் அருகிலே பல விதத் தின்பண்டங்கள், பொம்மைகள் முதலியவை அழகாக வைக்கப்பட்டிருந்தன. அவை இருக்குமிடம் நோக்கி அவன் போக முயன்முன். "குழந்தை, வா, போகாதே" என்றவுடன் அவன் திரும்பி வந்து விட்டான். மீண்டும் அவன் பின் தங்கிக் கீழே கிடந்த சங்குகள் சிப்பிகள் முதலியவற்றைப் பொறுக்கிய வண்ணம் வந்தான்.

"அம்மா, அந்த ராட்டினத்தில் நான் சுற்ற வேண்டும்" என்று அவன் கேட்டான். ஆனால் தகப்பனார் மறுத்து விடுவார் என்று அவன் நன்கு உணர்ந்திருந்தான். விடையளிப்பதற்கு முன் அவன் நிற்காமல் சென்று கொண்டே யிருந்தான். எதிரில் ஒரு பலூன்காரன் வந்தான். பல நிறப் பலூன்கள் வெவ்வேறளவில் அவனிடம் இருந்தன. "அம்மா, ஒரு பலூன் வாங்கிக் கொடு" என்று கேட்ட வண்ணம் மீண்டும் மேலே சென்முன் சிறுவன். இதற்குள் அவன் கூட்டத்திற்குள் நுழைந்து, ராட்டினத்தின் அருகே வந்து விட்டான். "அம்மா, அப்பா, அதில் சுற்ற வேண்டும்" என்று மீண்டும் அழுதவண்ணம் கேட்டான். திரும்பிப் பார்த்தபோது, அவர்களை அருகில் காணவில்லை. நான்கு பக்கமும் அவன் சுற்றிப் பார்த்தான். அவர்கள் எங்கும் கண்ணில் படவில்லை. உடனே, "அப்பா, அம்மா" என்று கத்திக்கொண்டே இங்குமங்கும் ஓடினன்; விசனம் தாங்காமல் விம்மி விம்மி அழத் தொடங்கினன். கண்ணில் நீர் ஆருய்ப் பெருக்கெடுத்தோடியது. அவன் முகத்தில் அச்சத்தின் அறிகுறி தென்பட்டது. தொண்டை அடைத்துக் கொண்டது. எங்குப் போவது என்று அவனுக்குத் தெரியவில்லை; இங்கும் அங்கும் ஆவேசங் கொண்

டவன் போல் ஓடி, இளைத்துப்போய்ச் செயலற்று நின்று விட்டான்.

பிறகு தூரத்தில் ஒரு மண்டபத்திற்குத் திரளாக மக்கள் போவதை அவன் கண்டான். உடனே அவன் அங்கு ஓடினான். அங்கு எள் போட்டால் கீழே விழாது ; அத்துணை நெருக்கமான கூட்டம். அக் கூட்டத்தில், கால்களுக்கிடையே நுழைந்து, "அப்பா, அம்மா" என்று கூக்குரலிட்டுக்கொண்டே மண்டபத்தின் அருகில் போனான். அங்கு மேலும் அதிக நெருக்கமாக இருந்தது. அவனை மக்கள் மிதித்துக் கொன்று விடுவார்கள் போல் இருந்தது. உடனே அவன் கீச்சென்று உரக்கக் கத்தினான். ஒருவன், கீழே அவன் மிதியுண்டு கிடந்ததைக் கண்டு மிகப் பரிவுடன் உடனே தூக்கினான். "நீ யாரப்பா, இங்கு எப்படி வந்தாய் ?" என்று அவன் கேட்டான். சிறுவன் அழுது கொண்டே, "என் அப்பா எங்கே, அம்மா எங்கே ?" என்று சோகக் குரலுடன் கேட்டான்.

அம் மனிதனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. "அந்த ராட்டினத்தில் சுற்றுகிறாயா ? வா, போகலாம்" என்றான் அவன். சிறுவன், "அப்பா, அம்மா தான் வேண்டும்" என்று விடை பகர்ந்தான். அருகில் ஒரு பாம்பாட்டி மகுடி ஊதிப் பாம்பை ஆட்டிக் கொண்டிருந்தான். "அதோ பார், பாம்பு எவ்வளவு அழகாக ஆடுகிறது" என்றான் அம் மனிதன். சிறுவன் கண்ணையும் காதையும் மூடிக்கொண்டு, "அப்பா, அம்மா, எங்கே ?" என்று அழுதான். பிறகு பலூன் காரனிடம் அவனை அம் மனிதன் அழைத்துச் சென்றான். "இந்த வானவில் நிறமுள்ள பெரிய பலூன் வேண்டுமா ?" என்று அவன் கேட்டான். "வேண்டாம், அப்பா, அம்மா தான் வேண்டும்" என்று பதில் வந்தது. எப்படியாவது அவனது அழுகையை நிறுத்தி மனதைத் திருப்ப வேண்டுமென்று

எண்ணிய அம் மனிதன், பூக்காரனிடம் சென்று, "இந்த மாலே வேண்டுமா? எவ்வளவு அழகாக இருக்கிறது பார்" என்றான். சிறுவன் மீண்டும் கண்ணை மூடிக்கொண்டு அழுதான். தின்பண்டக்காரனிடம் சென்று, "இவற்றில் எது வேண்டும்?" என்று அம் மனிதன் கேட்டான். "அம்மா, அப்பா" என்று சிறுவன் அழுதான். என்ன செய்தும் அவன் தன் அழுகையை நிறுத்தவே இல்லை.

பிறகு அருகில் ஒரு குடிசையிலிருந்து யாரோ ஒருவர், "மூன்று வயது ஆண் குழந்தை ஒன்று இக்கூட்டத்தில் தவறி விட்டது. அதன் பெற்றோர்கள் இக் குடிசையில் இருக்கிறார்கள். அந்தக் குழந்தையை யாராவது கண்டு பிடித்திருந்தால் தயவு செய்து இவ்விடத்தில் கொண்டு வந்து சேர்த்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று ஒலி பெருக்கியின் மூலம் அறிவித்துக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட அம்மனிதன் அந்தச் சிறுவனை அங்கு எடுத்துக் கொண்டு சென்றான். பெற்றோர்களைப் பார்த்த வுடன் அவன் ஓடிப்போய்த் தழுவிக்கொண்டு விம்மி விம்மி அழுதான். "உனக்குப் பலூன் வேண்டுமா? மிட்டாய் வேண்டுமா? என்ன வேண்டும்?" என்று அம் மனிதன் சிறுவனைக் கேட்டான். அதற்குச் சிறிது நேரம் அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் அழுது கொண்டே இருந் தான். மீண்டும் அம் மனிதன் அதே கேள்விகளைக் கேட் டான். அதற்குச் சிறுவன் அழுதுகொண்டே, "எனக்கு ஒன்றும் வேண்டாம். அப்பா அம்மாதான் வேண்டும்" என்று கூறினான். அவன் பெற்றோர்கள் அவனைக் கையில் எடுத்து அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டார்கள்.

I வினுக்கள் :

1. திருவிழாக் கூட்டம் எப்படி யிருந்தது ?
2. சிறுவன் என்னென்ன வேண்டுமென்று கேட்டான் ?
3. எப்படி அவன் தன் பெற்ருேரை விட்டுப் பிரிந்தான் ?
4. அவனைக் கண்டெடுத்த மனிதன் எப்படி அவனைத் தேற்றப் பார்த்தான் ?
5. பெற்ருேரை விட்டுப் பிரிந்த சிறுவனுக்குப் பின்பு வேண்டி யிருந்தது என்ன ?

II (1) பொருத்த மறிந்து இத்தொடர்களில் இச்சொற்களைச் சேர்க்க :

| | |
|---|---|
| எள் போட்டால் விழாத, | அழுதான் |
| மக்கள் கடல் போல், | கூட்டம் |
| கண்ணீர் ஆறுய் | ஒலித்தனர். |
| சிறுவன் செயலற்று, | பெருகிற்று. |

(2) வாக்கியங்களில் அமைத் தெழுதுக :

விம்மி விம்மி, செயலற்று, சோகக் குரல், ஆரவாரம், கடல் போல்.

III அருஞ்சொற் பொருள் :

ஆவேசம் — உணர்ச்சி மிகுதியான நிலை ; மகுடி — மகிழி ; ஒரு இசைக் குழல் ; சோகம் — விசனம் ; ஆரவாரம் — பெரிய சத்தம் ; பரிவு — அன்பு, இரக்கம்.

# 10. ராஜாஸர் அண்ணுமலைசெட்டியார்

பழங்காலம் தொட்டுத் தமிழ் நாட்டில் மூவேந்தர்களும் வள்ளல்களும், தமிழ்ப் புலவர்களும் தமிழ் மொழியையும் போற்றிப் புரந்து வந்திருக்கின்றனர். இக்காலத்தில் அவ்வாறு புரந்த பலருள் அண்மையில் இருந்த **ராஜா ஸர் அண்ணுமலை செட்டியார்** அவர்களைப் பற்றி அறியாதார் இரார். அன்னரது உயரிய வாழ்க்கை, தமிழ் நாட்டார்க்கு மட்டுமன்றி உலகினர்க்கே ஓர் ஒப்பற்ற உதாரணமாக விளங்குகிறது.

அண்ணுமலை செட்டியார், இராமநாதபுரம் மாவட்டத்தில் செட்டிநாட்டில் **காரைக்குடி**என்னும் ஊரில் **முத்தையா செட்டியார்** என்ற தன வணிகருக்கு நான்காம் மகனுய்ப் பிறந்தார். அவர் பிறந்தது 1881-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் நாள். அவர் இளமையில் ஆரம்பப் பள்ளியிலும் பிறகு உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்ருர். வீட்டிலே தந்தையார், மைந்தனுக்குத் தொழில் முறைகளையும் கணக்கு வழக்குகளையும் கற்றுக் கொடுத்தார். அண்ணுமலை செட்டியார், இளமையிலேயே இனிமை மிகுந்த தமிழ்ப் பெருநூல்களாகிய தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலியவற்றைத் தக்க ஆசிரியர்களிடம் பயின்ருர். அவற்றுடன் ஆங்கிலமும் கற்ருர். பேரறிஞர்களோடு அடிக்கடி நெருங்கிப் பழகி வந்தமையால் அவரது மொழியறிவு, கலையறிவு, உலக அறிவு முதலியவை பெருகின. அவருக்குச் சொற்பொழிவாற்றும் திறமையும் நன்கு அமைந்திருந்தது. அதனுல் அவர் பல மாநாடுகளில் தலைமை தாங்கினர். தக்க பருவம் வந்தவுடன் பெற்ருேர் அவருக்கு மனைமாட்சி மிக்க **சீதையாட்சி** என்னும் அம்மையாரைத் திருமணம் செய்துவைத்தனர்.

1901-ம் ஆண்டில் அவரது தந்தையார் இறந்தார். பின்னர் அடுத்த ஆண்டில் தம் சகோதரர்களுடன் யாதொரு பிணக்குமின்றி அமைதியாகச் சொத்துப் பிரிவினைசெய்து கொண்டு, அவர் தனியே வணிகத் தொழில் நடத்தலானார். தந்தையார் கற்பித்த தொழில் நுணுக்கங்களைப் பயன் படுத்தியும், ஓயாதுழைத்தும் அவர் பெருஞ் செல்வம் திரட்டினார். பல துறைகளில் தொழிலைப் பெருக்கித் தனது இடை விடா ஊக்கத்தாலும் திறமையாலும், தொழிலுலகில் தனக்கு நிகர் இல்லை என்னுமாறு அவர் சிறப்புற்று நின்றார். தம் தொழில் வளர்ச்சி கருதி அவர் பர்மா, இலங்கை, மலேயா, இங்கிலாந்து முதலிய இடங்களுக்குச் சென்று திரும்பினார்.



ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார்

பின்னர் அவர், திரட்டிய செல்வத்தைத் தக்க வழிகளில் பிறருக்குப் பயன்படுத்த முற்பட்டார். அவர் தெய்வபக்தி மிக்கவராதலால் முதலில் தம் செல்வத்தின் பெரும் பகுதியைக் கோயில் திருப்பணிகளுக்குச் செலவிட்டார்; சிதம்பரம், காளையார்கோயில், இளையாற்றங்குடி முதலிய தலங்களில் உள்ள கோயில்களில் பல திருப்பணி

களைச் செய்தார்; பின்னர் அதுமட்டுமன்றி மக்களுக்குப் பயன்படுமாறு வேறு அறங்களையும் செய்யக் கருதினார். அவற்றுள் தம்மூரில் அவர் நிறுவிய **பெண்ட்லண்டு மருத்துவ நிலையம்**, அவரது இரக்கச் சிந்தைக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குகிறது. தம் செல்வச் சிறப்பிற்கேற்ப அவர், தம்மூரில் ஓர் கலையழகு நிரம்பிய அரண்மனையைக் கட்டி முடித்தார். **1911**-ம் ஆண்டில் அவர் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு அவர் நன்கு உபசரிக்கப் பெற்றார்.

அருளுள்ளம் படைத்த அவர், பிறகு மக்களது அறியாமைப் பிணியைப் போக்குவதில் முனைந்தார். அதற்காக அவர் முதலில் **1920**-ம் ஆண்டில் சிதம்பரத்தில் **மீனாக்ஷி கல்லூரியை** அமைத்தார். அக் கல்லூரி பெருகி விரிவடைய அங்கு இடமில்லாமற் போகவே **1922**-ல் தில்லை அருகிலேயே உள்ள திருவேட்களம் என்னும் தலத்தில் ஒரு அகன்ற இடம் வாங்கி, அதை அங்கு மாற்றினர். சில ஆண்டுகளில் அது மிக விரிவடைந்து புகழ் பெற்றது. ஆகவே அதனை ஒரு பல்கலைக் கழகமாக மாற்றுதற்கு அவர் மனங் கொண்டார். அதற்காக அவர் முதலில் **20** லட்சம் ரூபாயை உவந்தளித்தார். பல அழகிய கட்டிடங்கள் அங்குக் கட்டப்பட்டன. **1929**-ம் ஆண்டில் அக் கல்லூரி அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக மலர்ந்தது. பிறகு பல்வேறு சமயங்களில் மேலும் **30** லட்சம் ரூபாயை அப் பல்கலைக்கழகத்திற்காக அவர் அளித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்று பலதுறைகளிலும் சிறப்புற்று விளங்குகிறது. அதில் ஆங்கிலக் கல்வி, கலைகள் முதலியவற்றையும் தமிழ், வடமொழி ஆகிய மொழிகளையும் கற்பித்து வருகிறார்கள்.

அண்ணுமலே செட்டியார், செல்வத்தின் பயன் ஈதலே என்று உணர்ந்து இங்ஙனம் நாட்டிற்கு நன்மை தரும் சிறந்த பேருபகாரங்களேப் புரிந்துள்ளார். அவர் அழியும் செல்வத்தால் அழியாச் செல்வமாகிய புகழை ஈட்டி, நாட்டில் நாட்டி விட்டார்.

நம் வள்ளலது ஒப்பற்ற பெரிய அறச் செயல்களே அரசாங்கம் பாராட்டி அவருக்கு 'ராஜா' 'ஸர்' என்னும் பட்டங்களே வழங்கியது. அது முதல் அவர் **ராஜா ஸர் அண்ணுமலே செட்டியார்** என்று அழைக்கப்பட்டார். ராஜா என்னும்பட்டம் அவருக்குப் பரம்பரைப் பட்டமாக அளிக்கப்பட்டதால் அவரது குமாரர் திரு. **முத்தையா செட்டியார்** அவர்களும் இப் பட்டத்திற்கு உரியவராக விளங்குகிருர். அண்ணுமலே செட்டியார் 1935-ம் ஆண்டில் மீண்டும் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு மேனுட்டுப் பாங்குத் தொழில்முறைகள், கல்வி முறைகள் ஆகியவைகளேக் கண்டு வந்தார். அங்கு அவருக்குச் சிறந்த வரவேற்பும் பாராட்டுதல்களும் கிடைத்தன. இந்தியாவிற்குத் திரும்பியவுடன் அவர், மேலும் அதிகமாகப் பாராட்டுதல்களேப் பெற்ருர்.

அண்ணுமலே செட்டியார், பலவித அருங்குணங்கள் நிறையப் பெற்றவர். அவர் அருளுள்ளம் படைத்தவர்; பொருள் ஈட்டலும், காத்தலும், வகுத்தலுமாகியவற்றில் அறநெறியைக் கடைப்பிடித்தவர்; இடைவிடா உழைப்பினர்; யாவரிடமும் அன்பு, அடக்கம், இனிமை முதலியவை தோன்றப் பேசுபவர்; பயனற்ற சொற்களே ஒருகாலும் பேசார்; பயனுள்ள சில சொற்களிலேயே கருத்தை வெளியிடும் இயல்பினர். இவ்வாறு பலவித நற்பண்புகள் வாய்ந்த அப் பெரியார், தம் அறுபத்தேழாம் வயதில் 1948-ம் ஆண்டு ஜூன் 15-ம் நாள் இவ்வுலக வாழ்வினே நீத்தார். அன்னரது நினேவுக் குறியாகப் பொது மக்க

ளால் கட்டப்பெற்ற " **அண்ணுமலே மன்றம்**" என்னும் அழகிய கட்டிடம், சென்னையில் இன்று மிகச் சிறப்புடன் காட்சியளிக்கிறது. அவரது புகழ்மணம் தமிழ் நாட்டில் மட்டும் அன்றிப் பிறநாட்டிலும் பரவிக் கமழ்ந்துகொண் டிருக்கிறது. அவர் இறந்தும் இறவாதவராக இலங்குகிருர். வாழ்க அவர் நற்பணிகள் !

---

**I வினக்கள் :**

1. அண்ணுமலே செட்டியாரது இளம் பருவக் கல்வியைப் பற்றி நீவிர் யாது அறிவீர் ?
2. அவர் பொருளே எவ்வாறு ஈட்டினர் ? எவ்வாறு பகுத் தளித்தார் ?
3. அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் கற்பிக்கப்படும் படிப்பு கள் எவை ?
4. அவரது அருங்குணங்கள் யாவை ?

**II. இரண்டாம் பாராவில் உள்ள முதல் வாக்கியத்தைப் பல சிறு வாக்கியங்களாகப் பிரித்தெழுக:**

**III. அருஞ்சொற் பொருள் :**

மூவேந்தர் — சேரர், சோழர், பாண்டியர் ; அண்மையில் — சமீப காலத்தில் ; நீத்தார் — விட்டார் ; புரந்து — பாதுகாத்து ; உவந்து — மகிழ்ந்து ; மனேமாட்சி — மனேவிக்குரிய நற்குணங்கள் ; நுணுக்கம் — நுட்பம் ; நிகர் — சமானம் ; பகுத்து — பிரித்து ; வகுத்தல் — வகையாகச் செலவிடுதல் ; கமழ்ந்து — மணம் விசி.

---

# 11. அபாயத்திற்கேற்ற உபாயம்

ஓர் ஊரில் தேவதத்தன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன், வியாபாரத்தில் பணம் திரட்ட வேண்டு மென்னும் ஆசையால் தொலைவில் உள்ள ஒரு நாட்டிற்குச் செல்ல விரும்பினான். அவனிடம் ஆயிரம் இரும்புக் கம்பிகள் இருந்தன. அவற்றைத் தன் ஊரில் இருந்த தன் நண்பன் ஒருவனிடம் கொடுத்து, "நண்பா! நான் தூரதேசம் சென்று வியாபாரம் செய்ய எண்ணி யிருக்கிறேன்; நான் திரும்பி வருமளவும் இவற்றை நீ வைத்திரு; நான் வந்தவுடன் இவற்றை உன்னிடமிருந்து பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறினான். அந்த நண்ப னும் "சரி, இருக்கட்டும், போய் வா" என்றான்.

தேவதத்தன், தான் சென்ற புதிய நாட்டில் பல வரு டங்கள் மிக முயன்றும், அதிகம் பொருள் சம்பாதிக்க முடியவில்லை. ஆகையால் ஊருக்கே திரும்பிப் போய் இரும்புக் கம்பிகளையாவது விற்றுப் பொருளீட்டலாம் என்று அவன் எண்ணினான். அவ்வாறே அவன் தன் ஊருக் குத் திரும்பி வந்தான். பிறகு தன் நண்பனிடம் சென்று தான் கொடுத்த இரும்புக் கம்பிகளைத் திரும்பத் தருமாறு கேட்டான். அந்த நண்பனோ ஒரு, நம்பிக்கை மோசம் செய்யும் வஞ்சகன். தேவதத்தன் கொடுத்த இரும்புக் கம்பிகளைத் தானே கவர்ந்து கொள்ள எண்ணி அவன், "நண்பா! நீ கொடுத்த இரும்புக் கம்பிகளை நான் கவனிக் காமலேயே அப்படியே வைத்துவிட்டேன்; நீ வருவ தற்கு முன்தான் அவற்றைப் போய்ப் பார்த்தேன்; அவற்றை யெல்லாம் எலிகள் சிறிது சிறிதாகக் கடித்துத் தின்றுவிட்டன. நான் வைத்த இடத்தில் சிறு இரும்புத்

துண்டு கூட இல்லை; இனி என்ன செய்வேன்! மிகவும் வருந்துகிறேன். நீ சீக்கிரம் திரும்பி வந்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காது" என்று சொன்னான்.

உடனே தேவதத்தன் திடுக்கிட்டுத் தன் மனதுக்குள், "ஐயோ! ஈதேது, அநியாயமாய் இருக்கிறதே! இவன் முதலுக்கே மோசம் செய்ய நினைக்கிறானே! எலிகள் எங்கேயாவது இரும்பைத் தின்னுமா? என்னை ஏமாற்றி என் பொருளைக் கவரவே இவன் இப்படிச் சொல்கிறான். பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டாமா! சரி, நானும் ஒரு உபாயத்தால் இவனது மோச எண்ணத்தில் மண்ணைப் போடுகிறேன்" என்று எண்ணி, அவனைப் பார்த்து, "நண்பா, நீ சொல்வது சரிதான். பாவம், எலிகள் தின்று விட்டதற்கு நீ என்ன செய்ய முடியும்? போனால் போகட்டும். நான் வருகிறேன்" என்று கூறிப் போய்விட்டான்.

பிறகு ஒருநாள் தேவதத்தன், தன்னை மோசம் செய்த நண்பனுடைய வீட்டிற்குப் போய், அவன் பார்த்திருக்க அவனுடைய பிள்ளையை விளையாடுவதற்கு அழைத்துச் செல்பவன் போல் எடுத்துக்கொண்டு போய் மற்றொரு வீட்டில் மறைத்து வைத்து விட்டான். மீண்டும் அவன் திரும்பி வந்து, தன் நண்பனிடம் ஏதோ பேசத் தொடங்கினான். அப்பொழுது அவன் "நீ எடுத்துச் சென்ற என் குழந்தை எங்கே?" என்று வினவினான். அதற்கு அவன், "நண்பா, உன் பிள்ளையை நான் தெருவில் தூக்கிக்கொண்டுபோகும்போது, ஒரு பெரிய பருந்து திடீரென்று பாய்ந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் விட்டது. நான் அதைத் தொடர்ந்து ஓடிப் பார்த்தும் குழந்தையை விடுவிக்க முடியவில்லை; அது கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ போய்விட்டது; என்ன செய்வேன்! மிகவும் வருந்துகிறேன்", என்று பதில் கூறினான்.

உடனே அவன், "ஐயோ! இவன் வேண்டுமென்றே என் பிள்ளையை ஒளித்து வைத்துவிட்டு இப்படிக் கூறுகிறான். பிள்ளையை எங்காவது பருந்து தூக்கிக்கொண்டு போகுமா! இது வெறும் பொய்" என்று எண்ணி, தேவதத்தனைப் பார்த்து, "என் பிள்ளையைக் கொண்டு வந்து கொடுக்காவிட்டால் உன்னை நான் சும்மா விடமாட்டேன். இப்படி என்னை ஏமாற்றி விடலாமென்று நினைக்காதே", என்று பயமுறுத்தி, அவனோடு சண்டையிட்டான். தேவதத்தனோ அவனுக்குப் பயப்படாமல், அவனோடு பெருங் கலகம் விளைத்தான். பிறகு இருவரும் அவ்வூர்த் தலைவனிடம் சென்றனர். தேவதத்தனுடைய நண்பன் அத் தலைவனிடம், "இவன் என் பிள்ளையை எடுத்துக்கொண்டு சென்றான்; பிள்ளை எங்கே என்றால் பறவை தூக்கிக் கொண்டு போய்விட்டது என்கிறான்; நான் அதை நம்பவில்லை. என் பிள்ளையை இவனிடமிருந்து எப்படியாவது வாங்கிக் கொடுக்க வேண்டும்", என்று கூறினான்.

ஊர்த் தலைவன், தேவதத்தனைப் பார்த்து, "இவனுடைய பிள்ளை எங்கே?" என்று கேட்கத் தேவதத்தன் "இவனுடைய பிள்ளையை நான் எடுத்துக்கொண்டு போகும் போது ஒரு பருந்து தூக்கிக்கொண்டு போய்விட்டது; என்ன செய்வேன்?" என்றான். தலைவன் நகைத்து, "இது என்ன புதுமை? எப்பொழுதும் இப்படி நடந்ததில்லையே! இப்படிப் பொய் சொல்ல உனக்கு எப்படி துணிவு உண்டாயிற்று?" என்று கேட்டான். அதற்குத் தேவதத்தன், "இது என்ன ஒரு புதுமையா? இரும்புக் கம்பிகளை எலி விழுங்கிவிட்டது இதைவிடப் பெரிய புதுமை அல்லவா? எலி இரும்பை விழுங்கியது போலவே, பருந்தும் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது; இதில் வியப்பொன்றுமில்லையே!", என்று விடை பகர்ந்தான்.

இதைக் கேட்டு அவ்வூர்த் தலைவன் சற்றுத் தயங்கி, தேவதத்தனைப் பார்த்து, "எலி எப்படி இரும்பை விழுங்கியதென்கிறாய்? அது எப்பொழுது நிகழ்ந்தது? விளக்கமாகச் சொல்" என்று கேட்டான். உடனே தேவதத்தன், நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னான். ஊர்த் தலைவன் வயிறு குலுங்கச் சிரித்து, "ஓ! இரகசியம் இதுதானா சரி. வாதியே! இரும்புக் கம்பிகளை நீ கொண்டு வந்து கொடுத்தால் உன் பிள்ளையும் உனக்குத் திரும்பக் கிடைக்கும்; போய் முதலில் அவற்றைக் கொண்டுவா" என்றான்.

தேவதத்தனுடைய நண்பன் திருடனைப் போல் விழித்து, வேறு வழியின்மையால் தன் வீட்டிற்குப்போய் இரும்புக் கம்பிகளையெல்லாம் கொண்டு வந்து கொடுத்தான். தேவதத்தனும் தான் ஒளித்து வைத்திருந்த குழந்தையைக் கொண்டுவந்து தந்தான். இப்படி இருவரும் தத்தம் பொருளைத் திரும்பப் பெற்று மகிழ்ச்சியடைந்து சென்றனர்.

---

I. **வினாக்கள் :**

1. தேவதத்தன் ஏன் இரும்புக் கம்பிகளை நண்பனிடம் கொடுத்தான்?
2. தேவதத்தன் திரும்பி வந்து கேட்டபோது அவன் என்ன சொன்னான்?
3. தேவதத்தன் ஏன் தன் நண்பன் பிள்ளையை ஒளித்து வைத்தான்?
4. அவர்களுடைய வழக்கு எப்படி முடிவடைந்தது?

II. தகுந்த இடத்தில் நிறுத்தக் குறிகளையிட்டு எழுதுக :

*தேவதத்தன் நானும் ஒரு உபாயத்தால் இவனது மோச எண்ணத்தில் மண்ணைப் போடுகிறேன் என்று எண்ணி அவனைப் பார்த்து நண்பா நீ சொல்வது சரிதான் பாவம் எலிகள் தின்று விட்டதற்கு நீ என்ன செய்ய முடியும் போனால் போகட்டும் நான் வருகிறேன் என்று கூறி விடை பெற்றுப் போய் விட்டான்*

III. அருஞ்சொற் பொருள் :

*தொலைவில் — தூரத்தில் ; நகைத்து — சிரித்து ; வியப்பு — ஆச்சரியம் ; விளக்கமாக — தெளிவாக.*

# 12. அரசு துறந்த அண்ணல்

நடிகர்: நெடுஞ் சேரலாதன், செங்குட்டுவன், இளங்கோ, நிமித்திகன், அமைச்சர், அவையோர், வாயிற் காவலாளன்.

இடம்: வஞ்சிமா நகர் ; அரசர் அவை மன்றம்.

**நெடுஞ்சேரலாதன்:** *(அருகில் செங்குட்டுவன், இளங்கோ ஆகிய இருவரும் இருக்கத், தான் அரியணை மீது அமர்ந்திருக்கின்முன்).* அமைச்சரே! நம் செங்குட்டுவனும் இளங்கோவும் தம் அரசியல் காரியங்களை நன்கு கவனித்துப் பயின்று வருகிறார்களா? அவர்களுக்கு நீங்கள் வேண்டிய அறிவுரை, ஆட்சிமுறை முதலியவற்றை எடுத்துரைத்து நல்ல பயிற்சி யளித்து வருகிறீர்களா?

**அமைச்சர்:** மன்னர் மன்னவ, வாழி! தங்கள் திருக்குமாரர் இருவரும் தமது செயல்களை மிகச் சிறப்பாகச் செய்து வருகிருர்கள். அவர்கள் தமது அறிவு நுட்பத்தால் எம்மையே திகைக்க வைக்கிருர்களே!

**வாயிற் காவலாளி:** *(ஓடி வந்து)* அரசே, வாழ்க! வாயிலில் ஓர் நிமித்திகர் வந்து காத்திருக்கிருர்; அரசரைக் காண வேண்டுமென்கிருர்.

**நெடுஞ்:** உடனே வரவிடு. *(வாயிற் காவலன் போய் நிமித்திகனை அரசனிடம் செல்ல விடுகிருன்).*

**நிமித்திகன்:** *(அவையில் வந்து).* இமய வரம்ப, நீவிர் ஊழி ஊழி வாழ்வீராக! வாழ்க உம் கொற்றம்!

**நெடுஞ்:** பெரியீர், வருக, வருக. ஆசனத்தின்கண் அமர்க. *(அவர் அமர்கிருர்).* ஐயா, நீங்கள் எந்த ஊர்?

**நிமித் :** யான் சோழ நாட்டிலிருந்து வருகிறேன். யான் ஒரு நிமித்திகன். (அரசிளங் குமாரர் இருவரையும் நிமித்திகன் கூர்ந்து நோக்குகிறான். பிறகு எழுந்து நின்று,) அரசே, உம்முடன் அமர்ந்திருக்கும் உமது மக்கள் இருவரில் இளையோனே அரசாளும் திரு உடையவனாக விளங்குகிறான். அவனுடைய முகக் குறியும், அங்க இலக்கணங்களும் இத் திரு அவனுக்கிருப்பதைக் காட்டுகின்றன.

**நெடுஞ் :** ஆஹா ! என்ன கூறினீர் ! அப்படியா ! அரசுரிமை முறைக்கு மாறுபட்டதல்லவா உமது கூற்று ?

**நிமித் :** அதென்னவோ எனக்குத் தெரியாது. யான் உம் மக்களிருவரையும் கூர்ந்து நோக்கி, அறிந்த உண்மையைச் சொன்னேன். (இதைக் கேட்ட செங்குட்டுவன் முகத்தில் கவலைக் குறி தோன்றுகிறது.)

**இளங்கோ :** (செங்குட்டுவனது கவலைக் குறியைக் கண்டு திடீரென்று எழுந்து நின்று) நிமித்திகரே, யாது கூறினீர் ? உமது கூற்று, முறைமைக் கேடாக இருக்கிறது. உமது சொல்லை யான் பொய்யாக்குவேன். (பின்பு செங்குட்டுவனை நோக்கி), அண்ணா, தாங்கள் சிறிதும் இதற்காகக் கவலை கொள்ள வேண்டாம். அண்ணன் இருக்கத் தம்பி அரசாள்வது என்பது நம் குலத்தில் ஒருபோதும் இல்லை. உம்முடைய இன்பத்திற்கு இடையூறாக நான் ஒரு நாளும் நிற்க மாட்டேன். எனது இக் கருத்தை நீங்கள் உறுதியாக நம்புதற்கு நான் இப்பொழுதே துறவியாவேன். (உடனே உள்ளே சென்று காவியுடை யணிந்து வருகிறான்).

**நெடுஞ் :** ஆ ! இதென்ன துணிவு ? இவ்வளவு அவசரம் ஏன் உனக்கு ?

**செங் :** இளவலே ! என்ன செய்யத் துணிந்தாய் ? சோதிடர் பேச்சைக் கேட்டுச் சுக வாழ்வைத் துறப்பதா?

அரண்மனை வாழ்வை விட்டு அடவி வாழ்வை மேற்கொள் வதா? வேண்டாம்; நீயே அரசாளுக. நான் அருகிலிருந்து துணை புரிவேன்.

**இளங்கோ:** இல்லை. என் துணிவை மாற்ற முடியாது. தமையன் அரசாள, நான் அருகிருப்பினும் அதுவும் தீதே. அரண்மனைச் சூழ்ச்சிகள், சதிகள் முதலியன என்னை அமைதியாக இருக்க விடா. நான் இங்கிருப்பது என் தமையனுக்கும் அமைதிக் குறைவைத் தரும். ஆகவே இங்ஙனம் துணிந்தேன். இது நம்மிருவர் நன்மையின் பொருட்டேயாகும்.

**நெடுஞ்:** உன் துணிவு என் மனதைத் துயருறுத்துகிறது; மீண்டும் யோசித்து முடிவு செய்.

**இளங்கோ:** தந்தையே, என் மனம் அமைதியையே நாடுகிறது. அரண்மனை வாழ்வில் அமைதி ஏது? நிமித்திகர் வரவு என் வாழ்வுக்கோர் வழி காட்டியாயிற்று. அவர் என் கண்களைத் திறந்து விட்டார். அரசுச் செல்வத்தினும் அருட் செல்வமே இனிது. அதனையே நான் அடைய விரும்புகிறேன். அந்தமில் பேரின்பத்திற்கு அரசனாகவே நான் ஆசைப்படுகிறேன். இத் துன்ப மிகுந்த மண்ணரசு எனக்கு வேண்டாம்.

**செங்:** இளவலே! இஃது உன் முடிவாயின் அதனைத் தடுக்க வல்லார் யார்? திருவருள் வந்து கூட்டும்போது தடுத்து நிற்றல் தகாது. எனினும் நான் உன்னைப் பிரிந்திருக்க லாற்றேன். உனது துணையும் அன்பும் அறிவுரைகளும் எனக்கு எப்பொழுதும் வேண்டும். இவ்வளவு காலம் என் அருகிலிருந்து துணை செய்தது போலவே இனியும் நீ இங்கிருக்க வேண்டும். என்னைக் கைவிட்டுச் செல்லாதே.

**இளங்கோ:** அண்ணலே! அப்படியாயின், நமது நகரத்துக் கோட்டையின் அருகிலுள்ள குணவாயிற் கோட்

டத்தில் நான் தங்கியிருப்பேன். என் தமையனுக்கு ஆறு தல் அளிப்பதிலும் வேறு நான் செய்யக்கூடியது யாது?

நெடுஞ்: மைந்த! உனது மதி நுட்பத்திற்கு இணை யில்லை. இருவரையும் மகிழ்விக்கக் கூடிய ஒரு வழியை நீ தேடினாய். அங்ஙனமே யாகுக. குணவாயிற் கோட் டத்தில் என் கண் குளிர உன்னைக் கண்டு கொண்டே யிருக்கும் நன்மையையாவது எங்களுக்கு நீ தந்தாயே. அரசு துறந்த நீ நாட்டையும் துறந்து காட்டிற்குச் செல் லாதிருக்க இணங்கியது நான் செய்த தவமே.

நிமித்: (அரசனையும் அரசிளங் குமாரர்களையும் நோக்கி) ஐயன்மீர்! என் உள்ளத்தில் தோன்றும் கருத் துக்களை வெளியிட வேண்டுவது என் கடமையாகும்; அந்த முறையில் அரச குமாரர்களைப் பார்த்தபோது தோன்றிய கருத்தை வெளியிட்டேன்; இதுபற்றி என்னைக் கோபிக்காமலிருக்க உங்களை வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

நெடுஞ்: நிமித்திகரே, நீர் வருந்த வேண்டாம். எங் களுக்கு உம் மீது வருத்தமொன்றுமில்லை. எம்மிடம் வந்த நீர் வெறுங் கையுடன் செல்லலாகாது. இந்த ஆயிரம் பொன்னையும் பெற்றுக் கொள்ளும். (நிமித்திகன் பெற்றுக் கொண்டு வணங்கிச் செல்கிறான்).

---

I. வினாக்கள்:

1. நிமித்திகன் கூறியது என்ன? அவன் எப்படி அதை யறிந் தான்?
2. அதைக் கேட்ட இளங்கோ யாது கூறினான்?
3. செங்குட்டுவன் இளங்கோவிற்குக் கூறியது என்ன?
4. இளங்கோ எங்கு அரசு துறந்திருந்தார்? ஏன் அங்கிருந் தார்?

**II தகுந்த இடத்தில் நிறுத்தக் குறிகளையிடுக :**

*இளவலே இஃது உன் துணிபாயின் அதனைத் தடுக்க வல்லார் யார் திருவருள் வந்து கூட்டும்போது தடுத்து நிற்றல் தகாது நான் உன்னைப் பிரிந்திருக்க லாற்றேன்*

**III அருஞ்சொற் பொருள் :**

*அரியணை — சிங்காதனம் ; நிமித்திகன் — சோதிடன் ; கூற்று — சொல்; கொற்றம் — வெற்றி; திரு — செல்வம்; துயர் — துன்பம்; குணவாயிற் கோட்டம் — கோட்டையின் கிழக்கு வாயிலிலிருந்த ஒரு கோயில் ; திருவருள் — கடவுள் அருள்.*

---

# 13. வானொலிப் பேச்சு

## எங்கள் ஊர் — மதுரை

எனதருமைப் பள்ளித் தோழர்களே !

நானும் உங்களைப் போல ஒரு பள்ளி மாணவன். நான் மதுரை அமெரிக்கன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஐந்தாம் படிவ மாணவன். என்னை இன்று "எங்கள் ஊரை"ப்பற்றிப் பேசும்படியாக வானொலி நிலையத்தார் இங்கு அழைத்திருக்கிறார்கள். ஆகவே எங்களூரைப் பற்றி நான் இப்பொழுது பேசப் போகிறேன்.

எங்களூராகிய மதுரை சரித்திரப்புகழ் வாய்ந்த பழம் பெரும் நகரம். இது தமிழ் நாட்டில் இயற்கை அழகும் வளமும் பொருந்திய வைகை ஆற்றின் தென் கரையில் அமைந்திருக்கிறது. அவ் ஆற்றின் இரு கரைகளிலும் அழகிய சோலைகள், பெரிய நீர்த் துறைகள் முதலியவையும் இடையே ஆங்காங்கு அழகிய மண்டபங்களும் அமைந்திருக்கின்றன. மதுரையின் அருகில் ஓடும் இவ் ஆறு அதற்கு ஓர் அணியாய் விளங்குகிறது. "**தமிழ் கண்ட வையை**" என்று பாரதியார் அதைச் சிறப்பித்துள்ளார். எங்களூர் மிகப் பழைய காலத்திலேயே புகழ்பெற்ற பாண்டியர் தலைநகராக விளங்கியது. அக் காலத்திலேயே இது மிக அழகும், செல்வமும் பொருந்தியதாக இருந்தது. இங்குப் பாண்டியர்கள் சங்கம் நிறுவித் தமிழை வளர்த்தார்கள்.

இக் காலத்தில் எங்கள் மதுரை தென்னிந்தியாவிலேயே சென்னைக்கு அடுத்த பெரிய நகரமாக இருக்கிறது. இதன் மக்கள்தொகை சுமார் நான்கு இலட்சம். இது தென் இருப்புப் பாதையில் ஒரு முக்கிய சந்திப்பு நிலையமாக இருக்கிறது. இங்கிருந்து வடக்கே சென்னைக்கும்,

மேற்கே போடிநாயக்கனூருக்கும், தெற்கே திருநெல்வேலிக்கும், கிழக்கே இராமேஸ்வரத்திற்கும் இருப்புப்



பொற்றாமரைக் குளமும், கோபுரமும்

பாதைகள் பிரிந்து செல்கின்றன; வடமேற்கே கோயம்புத்தூருக்கும் ஒரு பாதை செல்லுகிறது.

சங்க காலத்திற்குப் பிறகு பாண்டியர்களே யன்றி மதுரையை வேறு பல அரசர்களும் ஆண்டு வந்தனர்; இவர்களுள், 300 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த **நாயக்க மன்னர்களது** ஆட்சியே இந் நகருக்கு மிகவும் சிறப்பளித்தது. நாயக்க மன்னர்களுள் திருமலை நாயக்கர் என்பவர் மதுரையை மிகவும் அழகு படுத்தினர். அவர் மிகவும் தெய்வ பக்தியுடையவர்; ஆதலால் முன்பு பாண்டியர்கள் கட்டிய மீனாட்சி கோயிலைப் புதுப்பித்து அழகு படுத்தினார். இக் கோயிலின் கோபுரங்கள் வானளாவியுள்ளன. அவை ஊருக்கு அப்பால் பல மைல் தூரம் மிகக் கம்பீரமாக உயர்ந்து காட்சியளித்துக் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. திருமலை நாயக்கர், கோயிலில் மண்டபங்களையும் அழகிய சிற்பங்களையும் அமைத்தார். குறிப்பாக, அக் கோயிலிலுள்ள சிற்பங்கள் உலக முழுவதிலும் உள்ள மக்கள், கண்டு வியக்கத் தக்கவாறு அமைந்திருக்கின்றன. அக்கோயிலில் உள்ள **பொற்றாமரைக் குளம், ஆயிரக்கால் மண்டபம், கொடி மண்டபம்** முதலியவையும் அற்புதமான சிற்பச் சிறப்பு வாய்ந்தவை. இவையே யன்றித் திருமலை நாயக்கர், கோயிலின் வெளியே **புது மண்டபம்** என்னும் ஒரு எழில் மிகுந்த மண்டபத்தையும் கட்டியிருக்கிறார். அதில் நாயக்கர் மன்னர்களுடைய சிலைகள் இருக்கின்றன. திருமலை நாயக்கர் கட்டிய அரண்மனை இன்று **திருமலை நாயக்கர் மஹால்** என்னும் பெயருடன் விளங்குகிறது. அதுவும் யாவரும் வியக்கும்படி மிகப் பெரிய தூண்களையும் வளைவுகளையும் மண்டபங்களையும் கொண்டு காட்சிக்கு விருந்தாக இருக்கிறது. கோயிலிலிருந்து மூன்று மைல் தொலைவில் சுமார் 2 பர்லாங்கு நீளமும் அகலமுமுள்ள **பெரிய தெப்பக் குளம்** ஒன்று இருக்கிறது. அதன் நடுவே "மைய மண்டபம்" என்னும் ஒரு அழகிய சோலையுடன்

கூடிய மண்டபம் அமைந்திருக்கிறது. இத் தெப்பக் குளத்தில் ஆண்டுக் கொரு முறை மீனாட்சியம்மனுக்குத் தெப்ப உற்சவம் நடக்கும். அப்போது அக் குளத்தையும் மைய மண்டபத்தின் விமானத்தையும் தெப்பத்தையும் மிக அழகாகத் தீபங்களால் அலங்காரம் செய்வார்கள். விழாவைக் காண லட்சக்கணக்கான மக்கள் திரண்டு வருவார்கள்.

மதுரையின் அமைப்பு, நவீன நகரமைப்புக்கு ஓர் சிறந்த மாதிரியாக விளங்குகிறது. இந் நகரின் அமைப்பை நகரமைப்புக் கலை நிபுணர்களும் கண்டு புகழ்கின்றனர். நடுவே பெரிய அழகிய கோயிலும் அதைச் சுற்றி ஒன்றன் பின் ஒன்ருகப் பல அகன்ற தெருக்களும் அத் தெருக்களில் பல பெரிய மாட மாளிகைகளும் இந் நகரையழகு செய்கின்றன. கோயிலின் மதிலுக்குள் கோயிலைச் சுற்றி ஆடி வீதி என்று பெயர்கொண்ட சம சதுரமான நான்கு வீதிகள் உள்ளன. மதிலுக்கு வெளியே அது போலவே சித்திரை வீதி என்ற நான்கு வீதிகளும், அதனையடுத்து ஆவணி மூல வீதி என்ற நான்கு வீதிகளும் அமைந்திருக்கின்றன. அதற்கு அப்பால் நாற்புறமும் மிக அகன்ற தேரோடும் தெருக்களாகிய மாசி வீதிகள் நன்கமைந்து இருக்கின்றன. இறுதியாக வெளி வீதிகள் என்று நான்கு உள்ளன. இவ் வெளி வீதிகள் முற்காலத்தில் நகர்க் கோட்டையின் வெளியே இருந்தனவாகும். இதுவே இந் நகரின் அமைப்பு முறை. இக் காலத்தில் மதுரை மா நகர், வெளி வீதிகளுக்கு அப்பாலும் நெடுந் தூரம் விரிவடைந்து இருக்கிறது.

மதுரையைச் சுற்றி இயற்கை யழகும் வளமும் பொருந்திய சில குன்றுகளும் பண்டுதொட்டுப் புகழ் பெற்ற கோயில்களும் உள்ளன. மதுரைக்கு வட கிழக்கே

அழகர் மலையும் ஆனை மலையும், மேற்கே திருப்பரங் குன்ற மும் நாக மலையும் பசு மலையும் அமைந்து இந் நகர்க்கு இயற்கைக் காட்சி அழகினை அளித்துக் கொண்டிருக் கின்றன.

எங்கள் மதுரையின் சிறப்பு மிகுதிக்குக் காரணம் அதன் நடுவில் உள்ள மீனாட்சி கோயிலே. இச் சிறப்பால் இது "கோயில் நகரம்" என்றும் பெயர் பெற்றிருக்கிறது.



தெப்பக்குளம்

எங்களூரில் மாதந்தோறும் மக்கள் மனதிற்கு இன்பமூட் டும் வகையில் பல திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டா டப் பெறுகின்றன.. அவற்றுள் சித்திரைத் திருவிழாவே மிகப் பெரியதாகும். அதற்கு எண்ணற்ற மக்கள் வந்து குழுமுவார்கள். 'மூர்த்தி, தீர்த்தம், தலம் என்னும் முச் சிறப்புகளையும் உடையது மதுரை' என்று புராணங்கள் இதனைப் புகழ்கின்றன.

இக் காலத்தில் எங்கள் மதுரை நகரம் எல்லா வகையிலும் சென்னைக்கு அடுத்ததாகக் கருதப்படுகிறது. இந் நகரமானது ஒரு சிறந்த நகரசபையால் பரிபாலிக்கப்படுகிறது. சுகாதாரம், குடி தண்ணீர்வசதி முதலிய எல்லா நவீன ஏற்பாடுகளையும் நகராண்மைக் கழகம் செய்திருக்கிறது. எங்களூரில் பல பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. இந்தியாவிலேயே மிகப் பெரிய நூல் நூற்கும் தொழிற்சாலையாகிய "**ஹார்விமில்**" இங்குதான் இருக்கிறது. இஃதன்றி இன்னும் பல பஞ்சாலைகளும் எங்கள் நகரில் உள்ளன. பல வித பெரிய வியாபாரங்களும் செய்யப்படுகின்றன. கைத்தொழில்களில் நெசவு, சாயம்போடுதல் ஆகியவற்றிற்கு எங்கள் ஊர் மிகப் பெயர் பெற்றது. இந் நகரில் ஆண்களுக்கு மூன்று கல்லூரிகளும் பெண்களுக்கு இரண்டு கல்லூரிகளும் ஆக ஐந்து கல்லூரிகள் இருக்கின்றன. பதினைந்து ஆண், பெண் உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகட்குமுன் இந் நகரில் பாண்டித்துரைத் தேவர் நிறுவிய **மதுரைத் தமிழ்ச் சங்கம்**; தமிழ் வளர்ச்சிக்குரிய செயல்களைப் புரிந்துவருவது சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். எங்கள் பள்ளி மிகப் பெரிய பள்ளிகளில் ஒன்றாகும். இதில் சுமார் **1000** மாணவர் கல்வி பயில்கின்றார்கள். இவ்வளவு சிறப்புக்கள் பொருந்திய எங்கள் மதுரை மா நகரத்தை நீங்கள் ஒரு முறையாவது வந்து கண்டு களிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். — வணக்கம்.

---

**I வினாக்கள் :**

1. மதுரையின் பழம் பெருமை யாது ?
2. திருமலைநாயக்கர் மதுரையை எப்படி அழகு படுத்தினார் ?
3. மதுரை நகரின் அமைப்பை விவரிக்க.
4. மதுரையின் கோயிற் சிறப்பைக் கூறுக.

II **(1) எதிர்ப்பதம் கூறுக :**

*அகன்ற, உயர்ந்த, சிறந்த, இயற்கை.*

**(2) வாக்கியத்தில் அமைக்க :**

*சரித்திரப்புகழ், எழில்மிகுந்த, காட்சிக்கு விருந்து, வியக்கத் தக்க.*

III **அருஞ்சொற் பொருள் :**

*மூர்த்தி — கடவுள் ; தீர்த்தம் — புனித நீர் ; தலம் — புனித இடம் ; குழுமுவார்கள் — கூடுவார்கள்.*

---

# 14. நாகனாரும் வளவனும்

## (உரையாடல்)

(இடம்: கிள்ளிவளவன் என்னும் சோழ அரசன் அரண்மனை. புலவர் வெள்ளைக்குடி நாகனார் வாயிலில் நிற்கிறார்.)

நாகனார்: *வாயிற்காவல! வெள்ளைக்குடியிலிருந்து நல்லிசைப்புலவர் நாகனார் வந்திருக்கிறாரென்று அரசரிடம் அறிவிப்பாயாக.*

வாயிலோன்: *ஐய! அப்படியே செய்கிறேன். (அவன் உள்ளேபோய் அறிவிக்கிறான். அரசன் 'புலவரை வரவிடுக', எனப் பகர்கிறான். அப்படியே புலவரை உட்செல்ல விடுகிறான்.)*

நாகனார்: *வாழ்க! வளவ! சோழர்குடித் தோன்றலே மூவேந்தரினும் முதன்மையோனே நீடுவாழ்க!*

வளவன்: *புலவரே! தங்களைப்பற்றி நான் கேட்டதுண்டு; கண்டதில்லை; இன்று காணும் பேறு பெற்றேன். அதனால் என் மன மகிழ்ச்சிக்கு அளவில்லை. தங்களைக் காணவேண்டுமென்ற அவா நெடுநாளாக எனக்கிருந்தது. தாங்களே இப்பொழுது என்னை நாடி வந்துள்ளீர். என் பாக்கியமே பாக்கியம்! நானே முதலில் தங்களை வரவழைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது பெருந்தவறே. மன்னிப்பீராக.*

நாகனார்: *அரசரே! இது என்ன விந்தை! இங்ஙனம் நீர் பேசுவது பொருந்துமோ? எம் அரசராகிய உம்மிடம் இதுபற்றி யான் குற்றங்காணலாமோ? நிற்க,*

யான் இப்பொழுது வந்த காரியம் குறிப்பாக ஒன்றுளது. அதைக் கேட்க இது சமயந்தானா?

வளவன்: புலவர் பெரும! புலவர் சொற்களுக்குச் செவிகொடுக்கத் தடையும் உண்டோ? என் குடிமக்கள் எப்பொழுதும் என்னைக் கண்டு யாது வேண்டுமானாலும் சொல்லலாமே! அவ்விதமிருக்கத் தமிழ்ச்சான்றோராகிய தாங்கள் சொல்லுதற்கு என்ன தடை?

நாகனார்: பெரும! முரசுகள் ஒலிக்கின்ற சேனையையுடைய மூவேந்தருள்ளும் முதன்மையானவர் தாமேயன்றோ? அரசு எனக் கூறத்தகுந்தது உமது அரசேயன்றோ?

வளவன்: ஆம்! அதில் என்ன தடை? தாங்கள் என்னைப் புகழ்வது உபசாரமாக இருப்பினும், அத் தகுதிக்கு யான் உரியவன் என்பதே என்கருத்து. ஏனெனின், மற்ற சேர பாண்டியர் நாடுகள் போலல்லாது என் புனல் நாடு, இயற்கைவளம் பொருந்தியது; மக்கள் மிக உழைக்காமலே விளைவைத் தருவது. மக்கள் மிக உழைக்க வளந் தருவது, நல்ல நாடல்லவென்பது திருவள்ளுவர் திருவாக்கன்றோ!

நாகனார்: ஆம், வேந்தே! நான் கூறுவதும் அதுவேதான். நாடென்றால் சோழநாடுதான். பஞ்சத்திற்கும் வறட்சிக்கும் பல பயங்கரமான அறிகுறிகள் தோன்றினும், உன் நாட்டில் காவிரி, வெள்ளம் தப்பாது பெருக்கெடுத்து வந்து, கழனிகளில் பாய்ந்து, வளத்தைத் தரும். சனிக்கோள் புகைந்து காணினும், தூமகேதுக்கள் தோன்றினும் வெள்ளி தெற்கே செல்லினும் பஞ்சமும் வறட்சியும் மிகும் என்பர். அத்தகைய அஞ்சத்தகுந்த காலத்தும் காவிரி, கரைபுரண்டுவந்து கழனிகளுக்கு வளமூட்டும் நாடு உம்முடையதன்றோ!

வளவன் : பெருந்தகையே! புகழ்ச்சியில் புகுந்து, பேசவந்த பொருளை மறந்துவிட்டீரே! அதைக் கேட்க வன்றோ ஆவலாய் இருக்கிறேன்.

நாகனார் : காவல! மறக்கவில்லை. என் கடமையை நான் மறந்துவிடுவேனோ? நான் சொல்லவேண்டுவன வற்றைச் சொல்லவே இங்கு வந்தேன். அவை நீரும் நன்கு கேட்கவேண்டியவையே. தங்கள் நாடு செழித்திருந் தாலும் அச்செழிப்பிற்கும் தங்கள் ஆட்சிக்கும் ஒரு கேடும் வரக்கூடாதென்பதே என் கவலை. அதைக் கூறவே வந்தேன்.

வளவன் : அப்படியா! என் நாட்டிற்கும் ஆட்சிக் கும் கேடுவரக்கூடிய செயல்கள் எவையேனும் உண்டா? அவற்றைப் பற்றித் தாங்கள் கவலைகொள்ளக்கூடிய அள வுக்கு ஏதேனும் நிகழ்ந்துவிட்டதா?

நாகனார் : அவசரப்படாதீர், அரசர்பெருமானே! அறத்தின்படி முறைசெய்வதில் தாங்கள் அறக்கடவுள் போலவே இருக்கவேண்டும்; குடிகள் தங்களிடம் முறை யிட வரும்போது செவ்வி எளியராய்த் தாங்கள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால், சிறு மழைக்காக ஏங்கிக் கொண்டிருந்த மக்களுக்குப் பெருமழை கிடைத்தது போன்ற மகிழ்ச்சி உண்டாகும்.

வளவன் : தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில் லையே! நான் அவ்வாறில்லாமல் தவறியதுண்டா? என் மனமறிந்து நான் தவறியதில்லையே!

நாகனார் : பாவம்! தங்கள்மீது குற்றமில்லை. தங் களைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலார், ஏவலாட்கள் இவர்களைத்தான் குறிப்பிடுகிறேன். தங்கள் வெண் கொற்றக்குடை குடிகளின் துன்பத்தைத் தீர்ப்பதற்கா

கவே கவிக்கப்பட்டிருக்கிறது; அழகுக்காகவும் உமக்கு வெயிலை மறைக்கவும் அல்ல. அதை மறந்து அவர்கள் குடிகளைத் துன்புறுத்த முற்பட்டுவிட்டார்கள்.

வளவன்: அப்படியா! அவர்கள் செய்த தவறும் யான் செய்தது போலவன்றோ ஆகும். அப்படி அவர்கள் என்ன செய்துவிட்டார்கள்?

நாகனார்: அவர்கள் செயலுக்கும் தாங்கள் பொறுப் பென்பதைத் தாங்கள் உணர்ந்தது குறித்து மிக மகிழ் கிறேன். அதுவன்றோ அறநெறிப்படி ஆளும் அரசர்க் கழகு! சரி, தாங்கள் போர்க்களத்தில் பெறும் வெற் றிக்குக் காரணம் யார் தெரியுமா?

வளவன்: ஈதென்ன கேள்வி? எம் படைவீரர்தாம். இதை யார் மறுக்கமுடியும்? அதற்கென்ன இப்பொழுது? சொல்லவந்த செய்தியைச் சொல்லவில்லையே!

நாகனார்: தாங்கள் கருதுவது தவறு. தங்கள் வெற் றிக்குக் காரணம் வீரர் அல்லர். அவர்கள் வில்லை ஏராகக் கொண்டு போர்க்களத்தில் உழுபவர்; உண்மையான ஏரைக்கொண்டு விளைபுலத்தில் உழுபவர் அல்லர். உழவர் களது படைச்சாலில் விளையும் நெல்லன்றோ உமது படை வெற்றிக்குக் காரணம்!

வளவன்: (சற்று யோசித்து) ஆம்! புலவரே! தாம் ஓர் உழவப்புலவர் என்பதையும் அறிவேன். அதற்காக ஒருவேளை தாங்கள் தங்கள் தொழிலைப் புகழ்கிறீர்களோ? இருப்பினும் அது பொருந்தும். உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி என்பதை யான் அறிவேன். உழவர் சோம்பி யிருப்பின் யாம் விரும்பும் வெற்றி எமக்கேது? அதற்கும் நீர் கூறவந்த பொருளுக்கும் தொடர்பு என்ன? விளக்கு வீராக.

நாகனார்: கேளும் அரசே! வேற்றரசர்களையும் தம் அரசர் குடைக்கீழ் கொண்டுவருபவர் நெல்செல்வராகிய உழவரென்பது நீவிர் அறியாததன்று. இரப்போர் சுற்றத்தையும் புரப்போர் கொற்றத்தையும் உழவினால் பாதுகாப்பவர்களாகிய எங்களது நலனைத் தாங்கள் பாதுகாக்க வேண்டாமா?

வளவன்: ஆம், அதில் என்ன தடை? அது எனது முதற்கடமையென்றே நான் கருதுகிறேன்.

நாகனார்: ஆனால், தங்கள் அதிகாரிகளும் அலுவலாளரும் அவ்வண்ணம் கருதுவதாகத் தெரியவில்லையே! அவர்கள் தவறு செய்யினும் உலகம் தங்களையன்றோ பழிக்கும்! ஏன்? இயற்கையில் நிகழ்ந்த தவறுகளுக்கும் அரசனையன்றோ உலகம் பழிக்கிறது! மாரி தவறினும் இயற்கையல்லாத செயல்கள் தோன்றினும் இவ்வுலகம், காவலனே காரணமென்று அவனைப் பழிக்கும்.

வளவன்: ஆம்! அதை நினைக்க அச்சமாகத்தான் இருக்கிறது. அரசாட்சியே துன்பம் நிறைந்த தொழில். அதிலும், இயற்கையாக நிகழும் துன்பங்களுக்கும் அரசன் பொறுப்பென்றால், அது அஞ்சத்தகுந்ததே.

நாகனார்: இல்லை, அரசே! அதில் உண்மை இருக்கிறது. அரசன் செங்கோலனாயின், நாட்டில் எல்லா நலங்களும் நிறைந்திருக்கும். செங்கோல் கோடினால் தான் நலங்கள் குறைந்து தீங்குகள் மிகும். ஆட்சியில் எங்கோ தவறு இருப்பதால் தான் இயற்கையும் சினங்கொண்டு மக்களைத் துன்புறுத்துகிறது. மக்கள் அரசனையே தம் உயிராக நினைக்கின்றனர். அதையறிந்து அரசனும் அவர்கள் நலத்தைப் பாதுகாக்கவேண்டும்.

வளவன்: என் நாட்டில் எங்ஙனம் கோல் கோடியது என்பதை நான் அறியலாமா?

நாகனார்: நல்ல அரசாட்சி முறையை நன்கு அறிந்த நீவிர் அயலார் சொல்லைக் கேளாது குடிகளைக் காக்கவேண்டும். புறஞ் சொல்வார் பேச்சைக் கேட்டுத்தான் சில அரசர் தவறு செய்துவிடுகின்றனர். தங்கள் ஆட்சியிலும் அப்படிச் சிலர் இருக்கின்றனர்; பொறுமையால் புறங் கூறிக் கொடுமைகள் விளைக்கின்றனர். எம் ஊராகிய வெள்ளைக்குடியில் பல ஆண்டுகளாக மழை இன்மையால் விளைபுலம் விளைச்சல் இல்லாமல் நிலவரி கொடுக்க இயலாத நிலை ஏற்பட்டுளது. உழவர் தம் துயரத்தை எவ்வளவு எடுத்துக்கூறியும் கேளாது, உமது அதிகாரிகள் குடிகளைத் துன்புறுத்தி வருகின்றனர். அதனால் ஏழை உழவர் செய்வதறியாமல் துன்புறுகின்றனர். ஏழை யழுதகண்ணீர் கூரிய வாளாகும் என்பது தாம் அறிந்ததே. இப்பொழுது அவர்கள் துன்பத்தையும் என் வருத்தத்தையும் கூறவே நான் இங்கு வந்தேன். விளைபுலம் செழித்தும் வரிதர மறுத்தால், ஒறுப்பது நீதியே. நிலங்கள் விளைந்தும் வரிச் செலுத்த மறுப்பதாக யாரோ குறளை கூறியதைக் கேட்டு, உம் ஏவலாளர் எம்மைத் துன்புறுத்துகின்றனர். இந்நிலையில் தாங்கள் தலையிடுவது தகுதியென்று துணிந்து, தம்மிடம் தெரிவிக்க வந்தேன். அரசரே! ஆவன செய்க!

வளவன்: அப்படியா! உழவப்புலவரே! அஞ்சாதீர். என் ஏவலர் செய்த கொடுமைக்கு வருந்துகிறேன்; அவர்களைத் தக்கபடி தண்டிப்பேன். துயர் தீர்க. தாங்களும் தங்கள் ஊரினரும் நிலவரி ஒன்றும் செலுத்த வேண்டாம். இதுவரை தாங்கள் செலுத்தவேண்டிய எல்லா வரிகளிலிருந்தும் தங்களை விடுவிக்கிறேன். மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்.

நாகனார்: நன்றி! மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது மகிழ்ச்சியினும் இதைக் கேட்ட எமது ஊரினர்

மகிழ்ச்சி பன்மடங்கு அதிகமாயிருக்கும் என்பதில் ஐய மில்லை. தங்கள் உதவிக்குக் கைம்மாறு செய்ய, யான், அறியாதவனாயிருக்கிறேன். இருப்பினும், எனது சிறு சொற்கேட்டு நன்மை செய்த உம் அறிவின் சிறப்பை வியக்கிறேன்; உழவர் குடியைக் காக்கும் அரசன் உயர் வான்; அவனைக் கண்டு பகைவரும் அஞ்சிப் பணிவர் என்னும் உண்மைகளைத் தாங்கள் தெளிந்தது கண்டு மகிழ்கிறேன். இந்த நற்செய்தியை எம்மூரினருக்கு அறி வித்து விட்டு, மீண்டும் வந்து உம்மைக் காண்கிறேன். வேந்தே! விடைதருக.

வளவன்: போய்வருக, புலவரே! மீண்டும் தவறாது வருக! தாங்கள் என் கண்களைத் திறந்துவிட்டதற்கு நானன்றோ தங்களுக்குக் கைம்மாறு செய்யவேண்டும்! இப்பரிசைப் பெற்றுக்கொள்ளுங்கள். (ஒரு பொன் மாலையைக் கொடுக்கிறான்). எனக்குத் தாங்கள் கூறிய அறிவுரையை நான் பொன்னேபோல் பொதிந்துவைத்துக் கொள்வேன். போய் வருக!

நாகனார்: (பரிசில் பெற்று) வேந்தே! போய் வருகின் றேன். வணக்கம்!

---

**I வினாக்கள்:**

1. நாகனார் வளவனை முதலில் எவ்வாறு புகழ்ந்தார்?
2. காவிரியின் சிறப்பு எப்படிப்பட்டது?
3. அரசர்க்குக் குடை எதன்பொருட்டு?
4. அரசர்கள் வெற்றிக்குக் காரணம் யாவர்?
5. புலவர் வளவனுக்கு உரைத்த நீதிகள் யாவை?

**II எதிர்ப்பதம் தருக:**

செங்கோல், வறட்சி, அறிஞர், துயரம், தவறு, உண்மை, பழித் தல்.

### III அருஞ்சொற் பொருள் :

செவ்வி — சமயம்; ஏற்றம் — உயர்வு; கோள் — கிரகம்; தூமகேது — வால் நட்சத்திரம்; புலம் — நிலம்; அச்சாணி — வண்டி அச்சில் செருகும் கடை ஆணி; இயைபு — பொருத்தம்; இரப்போர் — யாசகர்; புரப்போர் — அரசர்; கொற்றம் — வெற்றி; கோடிய — வளைந்த; புறங்கூறி — கோள் சொல்லி; ஒறுத்தல் — தண்டித்தல்; குறளை — கோள் சொல்.

கழனி — வயல்; வெள்ளி — சுக்கிரன் என்னும் கிரகம்; படைச்சால் — ஏர் உழுத தடம்; உழவப் புலவர் — உழவு தொழிலையுடைய புலவர்.

# செய்யுட் பகுதி

## 1. வாழ்த்து

எத்திக்கும் தானுகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே! பராபரமே!

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே! இறையே! பராபரமே!

—தாயுமானவர்.

கொண்டல் வண்ணனைக் கோவலனுய் வெண்ணெய்
உண்ட வாயன் என்உள்ளங் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற்(று) ஒன்றினைக் காணுவே. (2)

—திருப்பாணுழ்வார்.

வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே! (3)

— மாணிக்கவாசகர்.

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம் (4)

—கிருஷ்ண பிள்ளை.

## குறிப்புகள்

1. எத்திக்கும் — எல்லாத் திசைகளிலும். இறையே — தலைவனே (கடவுளே). இதயம் — மனம்.
2. கொண்டல் — மேகம்.
3. வளி — காற்று. ஊன் — உடல். உண்மை — உள்ள பொருள். இன்மை — இல்லாத பொருள். கோன் — அரசன். ஆட்டுவான் — ஆட்டுவிப்பவன். நின்றனை — நின்ற உன்னை. வாழ்த்துவேன் — துதிப்பேன்.
4. மகிழ் — மகிழ்ச்சி. நனி — மிகவும். ஊனம் — கேடு. தீனரட்சகன் — ஏழைகளைக் காப்பவன். பதம் — பாதம். ஏத்துவாம் — துதிப்போம். சிந்தித்து — நினைந்து.

---

# 2. அறிவுரை

## (i) நன்னெறி

### நட்பின் தன்மை

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் ; — பூக்குழலாய் !
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 1

### இன்சொல்

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ; — பொன்செய்
அதிர்வளையாய் ! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவாற் பொங்கும் கடல். 2

—சிவப்பிரகாச சுவாமிகள்.

---

## (ii) நீதிநெறி விளக்கம்

### கல்வியின் சிறப்பு

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்;
புறம்கடை நல்லிசையும் நாட்டும்; — உறும் கவல்ஒன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும்; கல்வியின் ஊங்(கு) இல்லை
சிற்றுயிர்க்(கு) உற்ற துணை. 1

### சொல்வன்மை

எத்துணைய ஆயினும் கல்வி இடம்அறிந்து
உய்த்துணர்(வு) இல்லெனின் இல்லாகும்;—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து. 2

—குமரகுருபர சுவாமிகள்.

---

## (iii) திரிகடுகம்

ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை; — யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை; இம்மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு. 1

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்
கோளாளன் என்பான் மறவாதான், இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 2

—நல்லாதனார்.

---

I 1. நீக்கம் அறு — பிரிவற்ற. புணர்ந்தாலும் — சேர்ந்தாலும். நொய்தாகும் — அற்பமாகும் (குறைந்து விடும்). பூக்குழலாய் — பூவை அணிந்த கூந்தலையுடைய பெண்ணே! புல்லினும் — சேர்ந்தாலும். திண்மை — உறுதி.

2. இருநீர் — கடல், வியன் — பெரிய, அழல் கதிர் — சூரியன். தண்ணென் கதிர் — சந்திரன், அதிர் — ஒலிக்கின்ற.

II 1. வீடு — மோட்சம். பயக்கும் — கொடுக்கும். புறம்கடை — வெளியே. நல் இசை — நல்ல புகழ். உறும் கவல் — மிகுந்த துன்பம். உற்றுழி — உண்டானபோது.
கொடுக்கும் — உதவும். ஊங்கு — மிக்கது. (சிறந்தது).

2. உய்த்துணர்வு — ஆராயும் அறிவு. நாற்றம் — நறுமணம். உடைத்து — உடையது போலாகும்.

III 1. திரிகடுகம் — சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துகள். யாதும் — சிறிதேனும். இருளுலகம் — நரகம். சேராத ஆறு — அடையாமலிருக்க வழி.

2. தாளாளன் — தாள் + ஆளன் — முயற்சி உடையவன். விருந்து இருக்க — விருந்தினர் உண்ணுதிருக்க. விருந்து — புதுமை. கோளாளன் — பிறர் அறிவித்த காரியங்களை மனத்திற் கொள்ளுகின்றவன். கடன் படா — கடன் படாமல்.

---

# 3. கதைப்பகுதி

## (i) கயவன் கல்வி அருமை அறிந்தது

சீர்மிகும் பெயரால் ஓங்கும்
திருநின்ற ஊரில் வாழ்வோன்
நீர்மிகும் நிலங்கள் உள்ளோன்
நிறைபல ஏர்கள் உள்ளோன்
கார்மிகும் மேதி யுள்ளோன்
கால்நடை பலவும் உள்ளோன்
ஏர்மிகும் இல்லம் உள்ளோன்
எல்லனென் றியம்பும் பேரோன்.

காக்கைகண் விழிக்கு முன்னே
கண்விழித் தெழுந்து வாயில்
பாக்குடன் இலையை மென்று
பண்ணையை நோக்கிச் செல்வான்
ஊக்கமாய் வரப்பின் மீதே
உலவிவந் துறுவைக் கோலே
மேக்குறத் திரித்துப் பல்லே
மினுக்குறத் துலக்கு வானே. 2

உச்சியிற் பொழுது நிற்கும்
ஒருபகல் வேளை நண்ண
வெச்சுடன் வீட டைந்து
வெறியகூழ் கலக்கி உண்டு
இச்சையின் சொக்கட் டானே
இன்புடன் விரித்துக் கொண்டே
அச்சம யத்தில் ஆட
அயலவர் தமை யழைப்பான். 3

அழைத்தவ ருடனி ருந்தே
ஆடுவான் ஆங்கண் ஓர்நாள்
செழித்தநல் லறிவு சான்ற
தேசிகன் ஒருவன் போந்து
பழுத்தநற் பெரியீர் நுந்தம்
பாலனும் படித்தி டாமற்
பழித்திடத் திரிய வைத்தல்
பான்மையோ பகரும் என்றான். 4

கல்வியிங் கெமக்கேன் எங்கள்
கழனியைக் கண்கா ணித்துச்
செல்வமாய் வளர்ந்து மேனி
திகழுற இருந்தால் போதும்

நல்விவே கத்தாற் செல்வம்
நாசமே யாகும் என்னச்
சொல்லினர் எங்கள் முன்னோர்
சூதல மற்றும் கேளும்.

எங்கள்முற் பாட்ட னருக்
கிருவராம் குமரர் தம்முள்
அங்கொரு வனைப்பள் ளிக்கே
அனுப்பினர் அவனும் அன்றே
பொங்கிய காய்ச்சல் கண்டு
போயினன் என்பர் அந்தோ
இங்கென்மைந் தனையும் அவ்வா
றிழந்திடச் சொல்கின் றீரே. 6

பிள்ளையும் படிக்க வேண்டா
பிரம்படி படவும் வேண்டா
சள்ளையாஞ் சுவடி தூக்கிச்
சங்கடப் படவும் வேண்டா
முள்ளெனும் ஆணிகொண்டு
முறியினில் எழுத வேண்டா
பிள்ளையென் றிருந்தாற் போதும்
பெற்றவள் களிக்க என்றான். 7

ஐயநீர் சுவடி தம்மை
அடுக்கடுக் காகக் கற்றும்
உய்யவோர் வழியும் இன்றி
உழல்கிறீர் வீடு தோறும்
கையினிற் பொருளுள் ளார்க்குக்
கல்வியாற் பயன்றான் யாதோ
செய்யுமோர் தொழிலி லார்க்குச்
செப்புமிக் கதையை என்னு.

(உபாத்தியாயர் எல்லனை நோக்கி)

கற்றறி வில்லா மாந்தர்
கண்கெட்ட மாடே யாவர்
மற்றவர் மண்ணின் மீதே
மடமையில் மாழ்கி நிற்பர்
உற்றமற் றவர்கள் இந்த
உலகுக்கோர் சுமையே யாவர்
பெற்றவர் செய்த பாவம்
பிள்ளையாய்ப் பிறந்த தாமே. 9

மாண்புறு கல்வி, மாந்தர்
மடமையைக் கொல்வ தல்லால்
பூண்பணி போன்ற மக்கள்
பொன்றிடக் கொல்லா தையா!
வீண்பழி சுமத்தல் நன்றே
வித்தையால் விளிந்தான் என்றே
ஆண்பெண்என் றிருபா லாரும்
அறிவுறக் கற்கை நன்றால். 10

என்னவே கூறக் கேட்ட
எல்லனும் இதயம் நைந்து
முன்னமே அறியா தியானும்
மூடரில் முதன்மை பெற்றேன்
இன்னமும் அறிவு மாழ்கி
இருந்திடல் எளிமை யாமே
மன்னிய கல்வி என்றன்
மைந்தனுக் குணர்த்து கென்று. 11

தேசிகன் தன்னை வேண்டிச்
சிறுவனை அவன்பா லாக்கி
நேசமா யிவனை நல்ல
நெறியினில் உய்க்க என்ன

மாசிலவ் வுபாத்தி யாயன்
மைந்தனைத் தன்பாற் கொண்டே
ஆசிகள் பலவுங் கூறி
அறிவுநூல் புகட்டி னானே. 12

— கா. நமச்சிவாய முதலியார்.

---

## (ii) முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

குறுமுயல் சிங்கம் தன்னைக்
கொன்ற தொன்றுண் டேதென்னில்,
செறியும் ஓர் காட்டி லேஓர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடிஊன் மிகவும் தின்று
வெறியொடு திரியும் நாளில்
விலங்(கு) எலாம் ஒருங்கு கூடி, 1

" ஆணிளஞ் சிங்க மே! உன்
அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்!
விதத்தினில் தினம் ஒன்றாக
ஊண் உனக்(கு) அளிப்போம்" என்ன
உண்மையாக் கொண்டு, சிங்கம்
ஆணையும் இட்(டு), ஒவ் வொன்றாய்
அருந்தி அங்கிருக்கு நாளில், 2

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
" இனியது விடாது நம்மை;
எனினும், ஓர் எடுப்பெ டுத்து

வினையைஇப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோம் ஆகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்;
நமக்குநற் புகழுண்" டென்றே, 3

கருதி, அச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி,
மன்னன், "நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை; பிந்தி
வருவதென்? உரை நீ," என்று
மனந்தனில் சினந்து கூற; 4

"ஐய! நின் பசித்த வேளைக்(கு)
அடியனேன் வந்தேன்: ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித் திருந்தேன்;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்,
துய்யஉன் பக்கல் வந்தேன்;
சுவாமி! என்றிறைஞ்சி நிற்க; 5

சிங்கம், "நாம் அல்லால் வேறோர்
சிங்கம் நீ கண்டாயாகில்
அங்கதைக் காட்டவா," என்று
அழைத்தலும், அழைத்துப் போய், ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர(வு) அதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த(து);
அதன் நிழல் உருவம் தோன்ற; 6

தன்னுரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து,
துன்னுபங் கத்(து) அழுந்தித்
துளங்கியே மாய்ந்த தன்றே. — 7

— வீரமார்த்தாண்ட தேவர்.

---

## குறிப்புகள்

I 1. திருநின்ற ஊர் — செங்கற்பட்டு ஜில்லாவில் ஓர் ஊர். கார்மிகும் — கருநிறம் மிக்க. மேதி — எருமைக் கடா. ஏர்மிகும் — அழகுமிக்க. இயம்பும் — சொல்லும்.

2. பண்ணை — வயல். மேக்குற — மேன்மையாக.

3. வெச்சு — வெப்பம். வெறியசூழ் — வெறும்சூழ். இச்சை — விருப்பம்.

4. தேசிகன் — உபாத்தியாயன்; பழுத்த — வயது முதிர்ந்த பான்மையோ — தகுதியோ; பகரும் — சொல்லும்.

6. கழனி — வயல். திகழுற — விளக்கமாக. விவேகம் — அறிவு. பூதலம் — உலகம்.

7. சள்ளை — தொந்தரவு. ஆணி — எழுத்தாணி. முறி — பனை ஓலை. களிக்க — மகிழ.

8. உழல்கிறீர் — வருந்துகிறீர். செப்பும் — கூறும்.

9. மடமை — அறியாமை. மாழ்கி — வருந்தி.

10. பூண்பணி — அணியத்தக்க ஆபரணம். பொன்றிட — சாக. விளிந்தான் — இறந்தான்.

12. நெறியினில் — நல்வழியில். மாசு இல் — குற்றமற்ற.

---

II 1. குறு — சிறிய. செறியும் — அடர்ந்த. உறு — பொருந்திய. விலங்கு — மிருகம்.

2. அடவி — காடு. ஊண் — உணவு. ஆணை — கட்டளை.

3. எடுப்பு — தந்திரமான முயற்சி. உய்ந்தோம் — பிழைத்தோம். நனி — மிகுந்த.
4. பெருமத வேழம் — பெரிய மத யானை.
5. வெய்ய — கொடிய. வெருவி — அஞ்சி. பையவே — மெதுவாக. பருமுழை — பெரிய குகை. துய்ய — பரிசுத்தமான. பக்கல் — இடம். இறைஞ்சி — வணங்கி.
6. பங்கம் — சேறு. புனல் — நீர். துரவு — கிணறு.
7. சத்துரு — பகைவன். துன்னு — நெருங்கிய. துளங்கி — நடுங்கி.

---

# 4. பல்துறை

## (i) அரியது எது ?

*அரியது கேட்கின் வரிவடி வேலோய் !*
*அரிதரிது மானிடர் ஆதல் அரிது ;*
*மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு*
*பேடு நீக்கிப் பிறத்தல் அரிது ;*
*பேடு நீக்கிப் பிறந்த காலையும்*
*ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது ;*
*ஞானமும் கல்வியும் நயந்த காலையும்*
*தானமும் தவமும் தான்செயல் அரிது ;*
*தானமும் தவமும் தான் செய்வர் ஆயின்*
*வானவர் நாடு வழிதிறந் திடுமே.*

— ஔவையார்.

---

## (ii) தமிழன் இதயம்

*தமிழன் என்றொரு இனம்உண்டு*
*தனியே அவற்கொரு குணம்உண்டு.*
*அமிர்தம் அவனுடை மொழி ஆகும்*
*அன்பே அவனுடை வழி ஆகும்.* 1

அறிவின் கடலைக் கடைந்தவனும்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும்.
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான். 2

கவிதைச் சுவைகளை வடித்தெடுத்தான்
கம்பன் பாட்டெனப் பெயர்கொடுத்தான்
புவியில் இன்பம் பகர்ந்தளலாம்
புண்ணிய முறையில் நுகர்ந்திடுவான். 3

—வெ. இராமலிங்கம் பிள்ளை.

### (iii) பாண்டிய நாட்டு வளம்

தேன்பெருகும் சோலைத் தென்னன் வளநாடு;
கனியுதிரும் சோலைக் கனமதுரை நன்னாடு;
சோலை கிழக்கினும், துய்யபலா மேற்கினும்;
வாழை வடக்கினும், வான்கமுகு தெற்கினும்
கரும்பும் இளநீரும் கண்திறந்து மடைபாயும்;
கட்டுக் கலம்காணும் கதிர் உழக்கு நெல்காணும்;
அரிதாள் அறுத்துவர மறுதாள் பயிராகும்;
அரிதாளின் கீழாக ஐங்கலத்தேன் கூடுகட்டும்;
ஆனை கட்டும் தாளும் வானமட்டும் போராகும்;
மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை
தானாகத் தான்வளர்ந்து தழைத்தோங்கும் தென்மதுரை.

—அல்லியரசாணிமாலை.

## குறிப்புகள்

1. வடிவேலோய் — கூர்மையான வேலாயுதத்தையுடைய முருகனே. பேடு — ஆணுமல்லாத பெண்ணுமல்லாத பிறவி. நயத்தல் — விரும்புதல். வானவர் நாடு — தேவலோகம்.

2. பொறி — மெய், வாய், கண், மூக்கு, செவி. பகர்ந்த — சொல்லிய. எலாம் — எல்லாவற்றையும். நுகர்ந்திடுவான் — அநுபவிப்பான்.

3. தென்னன் — பாண்டியன். கனமதுரை — சிறப்பான மதுரை. துய்ய — பரிசுத்தமான. வான்கமுகு — உயர்ந்த பாக்குமரம். கண் — கரும்பின் கணு; இளநீரின் கண். கட்டு — ஒரு நெற்கட்டு. கலம் காணும் — ஒரு கலம் நெல் தரும். கதிர் — ஒரு நெற் கதிர். அரிதாள் — நெல்லின் தாள். (அரியும் தாள்) மறு தாள் — அறுத்த வேறொரு தாள். செந்நெல் — உயர்ந்தவகை நெல்.

# 5. தனிப் பாடல்

## தமிழ் நாடு

வேங்கடமே தென்குமரி வேலைஎல்லை நாடு
மென்மைகனி இனிமைகனி மேன்மை மொழிநாடு
தேங்கமழும் பொதிகைமலை தென்றல்உமிழ் நாடு
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு
பாங்குபெறு பாலிபெண்ணை பாவை பொன்னி நாடு
பாவளர்த்த வைகை யொடு பழம் பொருநை நாடு
தேங்குசுனை பாங்கருவி தெளிசாரல்நாடு
சிற்றோடை கால்பரந்த செய்ய தமிழ்நாடு!

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

## உழவே இனிது

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் — ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது. —ஔவையார்.

## சத்திரத்தில் சோறிடும் அழகு

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் — குத்தி
உலையில்இட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையில்இட வெள்ளி எழும்.

— காளமேகப் புலவர்.

---

## ஆடையே ஒருவருக்குச் சிறப்பு

மேலாடை இன்றிச் சபைபுகுந் தால்இந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமெண் ணார் ; நுவல் பாற்கடலோ
மாலா னவர்அணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே.

—நையாண்டிப் புலவர்.

---

## குறிப்புகள்

1. வேங்கடம் — திருப்பதி மலை. தென்குமரி — கன்னியாகுமரி வேலை — கடல். உமிழ் — வெளிவிடுகிற. பாங்கு — அழகு. பா — பாட்டு. தேங்கு — பெருகுகிற. சிற்றோடை — சிறு + ஓடை. கால் — வாய்க்கால்.
2. இல்லத்தே — வீட்டில். கேட்கில் — கேட்டால்.
3. கத்து — ஒலிக்கின்ற. கடல்சூழ் — கடலால் சூழப்பட்ட. நாகை — நாகபட்டினம். வெள்ளி — விடி வெள்ளி. எழும் — உதிக்கும்.
4. மேதினி — உலகம் — எண்ணார் — மதிக்கமாட்டார். நுவல் — (சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற. மாலானவர் — திருமால். ஆலாலம் — விஷம். தோலாடை — புலித்தோலாகிய ஆடை. அரன் — சிவன்.

---

RGR/965